www.padippakam.com


# வானவில்

VAANAVIL
ISSUE – 33 SEPTEMBER 2013

இதழ் - 33 புரட்டாதி 2013


# மக்களின் நன்மைக்காக வட மாகாணசபையும் அரசாங்கமும் ஒத்துழைத்துச் செயற்பட வேண்டும்!




**2013** செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி இலங்கையில் வடமேல் மாகாணம் (வயம்ப), மத்திய மாகாணம், வட மாகாணம் ஆகிய மூன்று மாகாணசபைகளுக்கும் தேர்தல் நடந்து முடிந்துள்ளது. இதில் முனனைய இரண்டு மாகாணசபைகளையும் ஆளும் ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பு கைப்பற்ற, வட மாகாணசபையை தமிழ் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளது.

தென்னிலங்கையைப் பொறுத்தவரை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கோ அல்லது தன்னை இடதுசாரிக் கட்சி என்று சொல்லிக்கொண்டு குறுந்தேசியவாத அரசியல் செய்துவரும் ஜே.வி.பீக்கோ அரசியல் எதிர்காலம் இல்லை என்பதை, இரண்டு மாகாணசபைகளின் முடிவுகளும் தெட்டத்தெளிவாக நிரூபித்துள்ளன.

அதேவேளை வடக்கு மாகாணசபையைப் பொறுத்தவரை, அங்கு மக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பை அமோக வெற்றி பெற (ஏறத்தாழ மூன்றிலொரு பங்கு உறுப்பினர்கள்) வைத்துள்ளனர். எந்தவித மோசடிகளும் இல்லாமல், மக்கள் சுதந்திரமாக வாக்களிக்கும் நிலைமையை ஏற்படுத்திய சூழலில், மக்கள் தமது தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். அவர்களது தீர்ப்பு நீண்டகால நோக்கில் தமது தலையில் தாமே மண் போட்டதாக அமையப்போகின்றது என்ற போதிலும், அவர்கள் வழங்கிய தீர்ப்பை அனைவரும் மதித்தே ஆகவேண்டும்.

போர் முடிவுற்ற பின்னர் கடந்த நான்கு ஆண்டுகளில் அரசாங்கம் வட பகுதி மக்களுக்கு எதிர்பார்க்காத அளவுக்கு அபிவிருத்தி வேலைகளைச் செய்தபோதிலும், அதற்கு எந்தவிதமான ஒத்துழைப்பையும் வழங்காதது மாத்திரமின்றி, அரசாங்கத்தின் வேலைகளுக்கு குழிபறிப்பு வேலைகளையும் செய்து வந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பை வடக்கு மக்கள் வெற்றிபெற வைத்திருப்பது, உலகில் சில தேசிய இனங்கள் மாறா நிலயியலாகப் பிற்போக்குக் கொள்கைகளை இறுகத் தழுவியிருப்பது போன்ற ஓர் நிலையிலேயே இலங்கைத் தமிழினமும் தொடர்ந்து இருந்து வருகிறது என்ற சந்தேகத்தை உருவாக்காமல் இல்லை. இந்த நிலை தமிழ் மக்கள் மத்தியில் வேலை செய்யும் முற்போக்கு சக்திகளுக்கு தொடர்ந்தும் ஒரு சவாலாகவே இருக்கப் போகிறது.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை வடக்கு மாகாணசபைத் தேர்தலில் அதற்குத் தோல்வி ஏற்பட்டாலும், இன்னொரு கண்ணோட்டத்தில் அது அரசுக்கு சில அனுகூலமான நிலைமைகளையும் தோற்றுவித்துள்ளது என்பதும் மறுபக்க உண்மையாகும்.

அதாவது அரசாங்கம் வடக்கு மாகாணசபைத் தேர்தலை நடாத்தப்போவதாக அறிவித்த போது, அரசாங்கம் ஒருபோதும் தேர்தலை நடாத்தாது என்றும், தமிழ் மக்களை ஏமாற்றவே அது பொய்யான அறிவிப்புகளைச் செய்கிறது என்றும், தமிழ் தேசியக் கூட்டமைப்பும், அதன் தென்னிலங்கை நட்புச் சக்தியான ஐ.தே.கவும், புலம்பெயர்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...



படிப்பகம்

www.padippakam.com

# இலங்கையில் பொதுநலவாய மாநாடு

நவம்பர் 15ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பொதுநலவாய அரச தலைவர்களின் 22வது மாநாடு இலங்கையில் நடைபெறவுள்ளது. பொதுநலவாய நாடுகளின் முதலாவது மாநாடு 1971 இல் சிங்கப்பூரில் நடந்தது. இம்மாநாட்டை கொழும்பில் நடத்துவது என்பது அனைத்து உறுப்பு நாடுகளும் இணைந்து எடுத்த கூட்டு முடிவு. 2009ஆம் ஆண்டு டிரினிடாட் மற்றும் டொபாகோ குடியரசில் (Republic of Trinidad and Tobago) இல் நடைபெற்ற 20வது பொதுநலவாய மாநாட்டில் எடுக்கப்பட்ட இந்த முடிவு, 2011ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற 21வது பொதுநலவாய மாநாட்டில் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது.

பொதுநலவாய அமைப்பு 54 உறுப்பு நாடுகளைக் கொண்டது. பொதுநலவாயம் என்பதனை பிரித்தானிய காலனித்துவ ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்ற நாடுகளின் கூட்டமைப்பு என்றும் அழைக்கலாம். எனினும் பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்குட்படாத மொசாம்பிக்கும் ருவாண்டாவும் இதன் உறுப்புரிமையை பெற்றுள்ளன. பொதுநலவாய அரச தலைவர்கள் பங்குபற்றும் மாநாடு, 2 வருடத்திற்கு ஒரு தடவை பொதுநலவாய நாடொன்றில் நிகழும். அந்நாட்டின் ஜனாதிபதி அல்லது பிரதமர் அந்த மாநாட்டிற்கு தலைமை வகிப்பதோடு, பின்னர் அடுத்து வரும் இரண்டு ஆண்டுகளுக்கு அவரே பொதுநலவாய அமைப்பின் தலைவராகவும் செயற்படுவார்.

இந்த பொதுநலவாய அரசியல் தலைவர்களின் சந்திப்பில் பொதுநலவாய நாடுகளின் பிரச்சனைகளே அதிகமாக கலந்துரையாடப்படுகின்றன. இலங்கையில் முதன்முறையாக நடக்க இருக்கும் இம்மாநாட்டில் தந்போதைய இலங்கை நிலவரங்கள் பற்றியும் நிட்சயமாக பேசப்படும். குறிப்பாக 2009 ஆண்டு இறுதி யுத்தத்தில் நிகழ்ந்தவைகள் பற்றியும் யுத்தத்தின் பின்னரான முன்னேற்றங்கள் பற்றியும் இலங்கையிடம் நாகரீகமான முறையில் கேள்விகள் தொடுக்கப்படலாம். கடந்த 4 ஆண்டுகளாக இலங்கையில் மனித உரிமை மீசல்களை கட்டுப்படுத்துமாறு கோரிவரும் பிரித்தானியா, அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, தென்னாபிரிக்கா போன்ற நாடுகள் இம்மாநாட்டில் கலந்து கொள்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

ஐம்பதிற்கு மேற்பட்ட நாடுகள் இலங்கைக்கு சென்று இலங்கையிடம் ஜனநாயக முறையில் உரையாடக்கூடிய வாய்ப்பினை பகிஸ்கரிக்குமாறு இந்திய அரசிடம் கோரிக்கைகள் விடப்பட்டுள்ளன. வழமை போலவே இக்கோரிக்கைகள், கடந்த 30 ஆண்டுகளாக இலங்கையை சீர்குலைக்க தவியாய் தவிக்கும் தமிழ்நாட்டு நாசகார சக்திகளிடமிருந்தே வந்துள்ளன. இச்சக்திகள் தமிழக அரசியல் கட்சிகளுக்களிலிருந்து தேசிய அரசியல் கட்சிகளுக்குள் வரை பரவிக்கிடக்கின்றன.

இலங்கையில் புலிகளுடனான யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர், இலங்கைமீது அதிகளவில் காழ்ப்புணர்ச்சியை காட்டி வருபவர்களில் முக்கியமானவர்கள், தமிழக அரசியல்வாதிகள். பெரும்பாலான இந்த அரசியல்வாதிகள் தமிழ் சினிமா வாயிலாகவே அரசியலுக்கு வந்தவர்கள். அதனால் தமிழக அரசியல்வாதிகளையும் தமிழக சினிமாவையும் ஒரு போதும் பிரித்து பார்க்க முடியாது.

ஒரு காலத்தில் தமிழகத்தில் இலங்கை தமிழர் பிரச்சனையில் எதிரும் புதிருமாக கதைத்து திரிந்தவர்கள், இப்போது இலங்கையை குத்திக் குதறவேண்டும் என்பதில் இணக்கப்பாடு கொண்டவர்களாக தெரிகிறார்கள். அப்படி இவர்களுக்கு இலங்கை அரசு என்னதான் செய்துவிட்டது? தமிழக மீனவர்கள் பிரச்சனையை ஒரு புறம் வைத்துவிட்டு பார்த்தால், இந்திய மக்களை இலங்கை அரசு ஒரு போதுமே துன்புறுத்தியதில்லை. தமிழகத்தில் புலம்பெயர் நாடுகளிலிருந்து புலிகளின் எச்சசொச்சங்கள் வீசும் எலும்புத் துண்டுகளுக்காக கூக்குரலிடுபவர்களும் இருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே.

தமிழகத்து சராசரி தமிழனுக்கு கருணாநிதி – ஜெயலலிதா அரசியல் கூத்துக்கள், சினிமா கிசுகிசுக்கள், மற்றும்பல அன்றாட செய்திகள் தாண்டி, இலங்கைப் பிரச்சனை பற்றி ஒரு தலைபட்சமாக வழங்கப்படும் செய்திகளின் அடிப்படையிலேயே அவன் இலங்கையைப்பற்றி அறிந்து வைத்திருக்கிறான். இதனால் அவனுக்கு தமிழக அரசியலில் இலங்கைப் பிரச்சனை பற்றி அக்கறை காட்ட வேண்டுமென்ற எண்ணப்பாடே இருப்பதாக தெரிகிறது.

பகிஸ்கரிப்பு என்ற வார்த்தையை அரசியலில் சாதாரணமாக கேட்டு வருகின்றோம். பகிஸ்கரிப்பு என்பது சாத்வீகப் போராட்டமாக வருணிக்கப்பட்டாலும் பகிஸ்கரிப்பதால் எதனை சாதிக்கிறோம் என்பது பொதுவாக தெளிவுபடுத்தப்படுவதில்லை. 1972களின் பின்னர் பாடசாலைகளை பகிஸ்கரிக்க கோரியே, இலங்கைத் தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தார்கள் என்பது வரலாறு.

இந்தியாவுடன் யுத்தங்கள் புரிந்த நாடுகளான சீனாவுடனும் பாகிஸ்தானுடனும் மீண்டும் நட்புறவுகளை பேணத்துடிக்கும் இந்தியா, நீண்ட காலமாக நட்புறவை பேணிவரும் இலங்கையை, சினிமாத்தர தமிழக அரசியல்வாதிகளுக்காக ஒரு போதும் பகைத்துக் கொள்ளக்கூடாது.

*

---

**வானவில்**

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com



படிப்பகம்

www.padippakam.com

யார் நினைத்திருப்பார்கள் பசிப் (அல்லது பட்டினி - Hunger) பிரச்சினை என்பது 21ஆம் நூற்றாண்டில் இந்தப் பூமியின் அதிமுக்கியமான பிரச்சினையாக உருவெடுக்கும் என்று? எப்படியிருந்தபோதிலும் அதுதான் உண்மை. ஐ.நாவின் தகவலின்படி 1.2 பில்லியன் (120 கோடி – மொ–ர்) மக்கள் உணவுப்பற்றாக்குறையால் அவதிப்படுவதுடன், இந்தத் துயரத்தின் அளவு விரிவடைந்தும் செல்கிறது. ஐ.நா இந்தச் சோகத்தைத் தடுப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்ற போதிலும், அதில் சிறிதளவே வெற்றி கிடைத்திருக்கின்றது. இந்த உலகளாவிய பசிப் பிரச்சினையால் சிலர் நன்மை அடைகின்றார்களா?



உலகளாவிய பசி பற்றிய பிரச்சினை பற்றிய மதிப்பீட்டு அளவானது குழப்பம் நிறைந்ததாகவும், நீண்டதொரு

# பசி 21ஆம் நூற்றாண்டில் இந்தப் பூமியை அழித்துவிடுமா?

நடைமுறையைக் கொண்டதாகவும் இருக்கின்றது. பலமுறை பல அதிகாரிகள் பிந்திய தகவல்களைக் கொண்டிராதவர்களாக உள்ளனர். ஐ.நா உணவு மற்றும் விவசாய ஸ்தாபனம் (Food and Agriculture Organisation - FAO) ‘‘பசியின் குரல்கள்’’ என்ற புதிய வேலைத்திட்டத்தின் மூலம் மாற்றத்தைக் கொண்டுவர முயல்கிறது. வெவ்வேறு நிறுவனங்களால் (Companies) தயாரிக்கப்படும் வரட்சி பற்றிய எண்ணிக்கைகள், அறிக்கைகள் மற்றும் கற்கைகளை விட பசி பற்றி மக்கள் பேச வேண்டுமென ஐ.நா விரும்புகிறது.

சேர்ஜி வசிலென்கோ (Sergei Vasilenkov)

உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்தின் மூத்த புள்ளிவிபரவியலாளர் கார்லோ கஃபிரோ (Carlo Cafiero) அவர்களின் கூற்றுப்படி, பசி பற்றிய வகைப்படுத்தும் முறைமை மிகவும் முக்கியத்துவமுடையது. ஆனால் அது குறிப்பிடக்கூடிய தாமதங்களுடனேயே தகவல்களை வழங்குகிறது. தகவல்கள் சேகரிப்பது, சரிபார்ப்பது, செயல்முறை மற்றும் வழங்குவது என்பனவற்றுக்கு இரண்டிலிருந்து மூன்று வருடங்கள் எடுப்பதாக கார்லோ கஃபிரோ கூறுகிறார். மதிப்பீடுகளைப் பொறுத்தவரை இதுதான் உண்மை. வளர்ச்சி அடைந்த நாடுகளில்கூட இது ஒவ்வொரு வருடமும் செய்யப்படுவதில்லை (ஐந்து வருடங்களுக்கு ஒருமுறையே செய்யப்படுகின்றது). இதன் காரணமாக நாம் சரியான தரவுகளைக் கொண்டிருக்காததுடன், சமகால உண்மை நிலைமையையும் விளங்கிக்கொள்ள முடியாமல் இருக்கின்றது. உணவு விலை நெருக்கடியின் போது இது நிரூபணமானது.

2007இல் நிபுணர்கள் உலகளாவிய பொருளாதாரச் சுருக்கநிலை (Recession) ஏற்படுமெனவும், உணவு விலைகள் அதிகரிக்கும் எனவும் கூறியிருந்தார்கள். இதன் பலனாக உணவு நுகர்வில் தீவிரமான குறைப்பு ஏற்படுமென எதிர்பார்க்கப்பட்டது. புள்ளிவிபரவியலாளரின் கூற்றுப்படி சில வருடங்களின் பின்னர் இந்தியா, சீனா மற்றும் சில வளர்முக நாடுகளில் பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சி அடையவில்லை என்பது தெளிவானது. மோசமான விடயம் என்னவெனில், நிலைமை எப்பொழுதுமே புரிந்து கொள்ளப்படாததுடன், எதிர்வு கூறலுக்குத் தங்கியிருக்கும் மாதிரியும் தவறானது எனத் தெரிய வந்தது.

‘‘பசியின் குரல்கள்’’ என்ற புதிய திட்டம் கூடுதலான அளவு சரியானதாகவும், நேரத்துக்குரிய தகவல்களையும் கொண்டிருக்கும். வருடாந்த கணிப்பீடுகளின் அடிப்படையில் பசியின் அளவு மதிப்பிடப்படும். வரும் மாதங்களில் இத்திட்டம் அங்கோலா, எத்தியோப்பியா, நைகர் மற்றும் மாலவி போன்ற நாடுகளில் பரீட்சித்துப் பார்க்கப்படவிருக்கிறது. மக்கள் தொலைபேசி ஊடாக அல்லது தனிப்பட்ட உரையாடல்கள் மூலமாக வாக்களிப்பார்கள். இதன்மூலம் நாம் பிரதிநிதித்துவ முறையொன்றைப் பெறுவதுடன், தகவல் வழங்குபவர்களின் குடும்பங்களில் பசிப் பிரச்சினை எவ்வளவு பாரதூரமாக இருக்கிறது என்பதை விளங்கிக் கொள்ளவும் உதவும் என்று கூறுகிறார் கார்லோ கஃபிரோ.

உதாரணமாக, உணவு பெறுவதிலுள்ள பிரச்சினைகள், ஒரு நேரச் சாப்பாடு கிடைக்காதிருப்பது அல்லது ஒருநாள் முழுவதுமே ஒன்றுமே சாப்பிடாமல் இருப்பது போன்ற விடயங்கள் குறித்து மக்களிடம் கேட்கப்படும். கடந்த வருடம் நிலைமையை ஆராய்வதற்காக இதுபோன்ற எட்டுக் கேள்விகள் கேட்கப்பட்டன.

www.padippakam.com

உயர்ந்த தகைமையுடைய நிபுணர்களால் தகவல்கள் சேகரிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டதால், அது தன்வயமான ஒன்றாக அமையவில்லை என உணவு மற்றும் விவசாய ஸ்தாபன புள்ளிவிபரவியலாளர் கூறுகின்றார். மதிப்பீடுகளைச் செய்வதற்கும், அதன் விபரங்களை உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்திற்கு வழங்குவதற்கும் அவர்கள் எடுத்த காலம் மூன்று மாதங்களைத் தாண்டவில்லை.

''பசியின் குரல்கள்''களினால் நடாத்தப்படும் கருத்துக் கணிப்புகள் 150 நாடுகளைச் சேர்ந்த 160,000 மக்களிடம் அண்ணளவாக நடாத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டம் ஐந்து வருடங்களுக்கென வடிவமைக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் உணவு விவசாய ஸ்தாபனம் உணவுப் பாதுகாப்பு பற்றிய புதிய தராதரங்களை வளர்ச்சியுறுத்தும் எனச் சொல்லும் அந்த ஸ்தாபனத்தின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கான துணைப் பணிப்பாளர் நாயகம் ஜோமோ சுந்தரம் (Jomo Sundaram), இந்தப் புதியமாதிரியானது, உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்த்துப் போராடும் அரசாங்கங்கள், சிவில் சமூகம், சர்வதேசிய – தேசிய நிறுவனங்கள் என்பவற்றுக்கு ஒரு முக்கியமான கருவியாக இருக்கும் எனக் கூறுகிறார். உணவு விவசாய ஸ்தாபனம் இப்பொழுது இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக உள்ளுறைவாகவுள்ள பங்காளிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி வருகின்றது.

கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் எல்லாவிதமான ஊடகங்களும் பசிப் பிரச்சினை பற்றிக் குறிப்பிட்டு வருகின்றன. பல நாடுகளும் சர்வதேச ஸ்தாபனங்களும் குறிப்பிடக்கூடிய பெரும்தொகைப் பணத்தைச் செலவு செய்வதன் மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிட முயல்கின்றன. ஆனால் குறிப்பிடக்கூடிய விளைவுகள் எதுவும் இதுவரை எட்டப்படவில்லை. பசியால் வாழும் மக்களின் தொகை அதிகரித்துச் செல்கிறது. ஒருவேளை இந்தப் பிரச்சினையை நாம் வேறொரு கோணத்தில் இருந்து பார்க்க வேண்டுமோ?

கோட்பாட்டுரீதியாக உலகிலுள்ள ஒவ்வொருவருக்கும் தேவையான உணவு இருக்கின்றது. ஆனால் யதார்த்தம் என்னவெனில் இந்தப் பூமியில் ஆறு பேரில் ஒருவர் பசியால் வாடுகிறார் அல்லது போசாக்கின்றி இருக்கின்றார். இதற்கு அரசியல்வாதிகளைத்தான் குற்றஞ்சாட்ட வேண்டும் எனக் கருதுகிறார் Deutsche Welle இன் பிரதம ஆசிரியர் Ute Schaeffer. இந்தப் பூமி எழுநூறு கோடி மக்களுக்கும் சுலபமாக உணவூட்ட முடியும். இந்த உலகம் போதுமான உணவை உற்பத்தி செய்கிறது. பசி என்பது நெருக்கடி நிலைகளாலும், இயற்கை அழிவுகளாலும் மட்டும் ஏற்பட்ட ஒன்றல்ல. இது சிலரால் உருவாக்கப்பட்ட அரசியல் பிரச்சினையாகும்.

அரசியல்வாதிகளுக்கு பசி பற்றிய பிரச்சினைகளில் அக்கறையில்லை. அவர்கள் ஐரோப்பிய நுகர்வாளர்களினதும் விவசாயிகளினதும் குரல்களுக்கே மதிப்பளிக்கின்றனர். பசி பற்றிய குரல்களை அவர்கள் கவனத்தில் எடுப்பது இல்லை. ஏனெனில் அவர்களுக்கென சொந்தமான அரங்கு இல்லை. பசியிலிருந்து இலாபமீட்டுபவர்கள் யார்? பசியை உருவாக்கும் நிலைமைகளுக்கான அமைப்பினால் சில செல்வாக்கான சக்திகள் இலாபமடைகிறார்கள் என்பது தெளிவான விடயமாகும்.

சந்தைக் கேள்விகளை விட கூடுதலான உணவை உற்பத்தி செய்யும் ஐரோப்பிய விவசாயிகளுக்கு இது அனுகூலமானது. அவர்கள் அரசியல் ஆதரவாலும், கூடுதலான அரசாங்க மானியங்களாலும் உத்தரவாதமுள்ள வருமானத்தைப் பெறுகின்றனர். விவசாயத்திற்குத் தேவையான இரசாயன வகைகளாலும், தங்கள் சொந்தத் தானியங்களைக் கொண்டு சந்தைகளை நிரப்புவதாலும், பெரிய விவசாய நிறுவனங்கள் பசியைப் பயன்படுத்தி இலாபமீட்டுகின்றன. உணவுச் சந்தைகளில் உள்ள பங்குச் சந்தை வியாபாரம் செய்பவர்களும் பசியைப் பயன்படுத்தி பணத்தைச் சம்பாதிக்கின்றனர். அடிக்கடி விலைகள் உயர்வடைவதால், அடிப்படை உணவுப் பொருட்கள் சந்தைப் பங்கு வியாபாரத்துடன் தொடர்புள்ளதாக இருக்கின்றது. உணவுச் சந்தைகள் முதலீட்டாளர்களுக்கும், பங்குச் சந்தை வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் மிகவும் இலாபமீட்டும் ஒன்றாக மாறியுள்ளது. போர்ட் – ஓ – பிறின்ஸ் (Port-au-Prince) அகடெஸ் (Agadez) அல்லது டக்கா (Dhaka) விலுள்ள மக்கள் அதிகரித்த விலையில் உணவுப் பொருட்களை வாங்க முடியாது திண்டாடுகின்றனர். அமெரிக்கா உலகின் பல பாகங்களிலும் வறுமையை ஒழிப்பதற்காக பெருந்தொகையான பணத்தை தரும ஸ்தாபனங்களுக்கு ஒதுக்குகின்றது. உதாரணமாக, கடந்த வருடம் வொசிங்டன் (Washington) 565 மில்லியன் டொலர்களை ஆபிரிக்க முனைக்கு (Corn of Africa) அனுப்பியது. இதைப் பார்க்கும் போது அது ஒரு நல்ல விடயமாகத் தோன்றும். ஆனால் அதை அப்படியே இலேசாக எடுத்துவிட முடியாது. மனிதாபிமான உதவிகள் வழங்குவதற்கான திட்டங்கள் பல அர்த்தங்களைக் கொண்டுள்ளன. அமெரிக்கத் தொண்டு நிறுவனங்கள் பற்றி நிக்கோலாய் ஸ்ரறிக்கோவ் (Nikolai Starikov) தனது நூலொன்றில் எழுதியுள்ளார்.

முதலாவதாக பசியால் வாடும் குழந்தைகளுக்கு உதவுவதற்காக நிதி திரட்டப்பட வேண்டும். அதன் பின்னர் உற்பத்திகள் கொள்வனவு செய்யப்பட்டு மோசமான வறுமையில் வாடும் நாடுகளுக்குத் தருவிக்கப்பட்டு பசியால் வாடுபவர்களுக்கு விநியோகிக்கப்பட வேண்டும். தரும ஸ்தாபனங்கள் சம்பந்தமாக மக்களின் சாதாரண மனநிலை இதுதான். ஆனால் அமெரிக்க அரசியல்வாதிகள் கருதுவது முற்றிலும் வேறானது. பசியால் வாடும் ஆபிரிக்கர்களுக்கு உணவு உதவி வழங்குவதற்காக பெரும்தொகை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அது பெரிதாக விளம்பரப்படுத்தப்படும். போசாக்கற்ற ஆபிக்கச் சிறுவர்கள் தமது வெற்றுக் கால்களுடன் நகரும் கோரமான காட்சிகளை உள்ளடக்கமாகக் கொண்டு விவரணப் புகைப்படங்கள், திரைப்படங்கள் காட்டப்படும். பின்னர் இலட்சக்கணக்கான டொலர்கள் பெறுமதியான அமெரிக்க உற்பத்திகள் கொள்வனவு செய்யப்படும்.

அமெரிக்க சட்டத்தின்படி எல்லா உணவு உதவிகளும் கட்டாயமாக அமெரிக்காவினுடையதாக இருக்க வேண்டும். பின்னர் மனிதாபிமான உதவிகள் அமெரிக்கக் கப்பல்களில் மட்டுமே அனுப்பி வைக்கப்படும். இந்த வழிமுறையின் மூலம் அமெரிக்கர்கள் தமது விவசாயத்துறையினர், கப்பலோட்டிகள் மற்றும் துறைமுகத் தொழிலாளர்கள் ஆகியோருக்கு உதவுகின்றனர். ஆனால் அதில் இன்னும் நிறைய இருக்கின்றது. மனிதாபிமான ஸ்தாபனங்கள் பசிக்காக உணவு வழங்குவதில்லை என்பதைச் சிலர் அறிவார்கள். அவர்கள் அதை அதிக விலைக்கு விற்கிறார்கள். இந்தக் குற்றம் சாதாரணமாகவே திகைப்பையுண்டாக்கும்.

உணவுப் பொருட்களை விற்பதிலிருந்து கிடைக்கும் வருவாயைப் பாதிக்கப்பட்ட நாடுகளின் விவசாய அபிவிருத்திக்குச் செலவிட வேண்டும். எப்படியிருந்த போதிலும், கடலுக்கு அப்பாலிருந்து மலிவான உணவுப் பொருட்கள் வருவதால், அது உள்ளூர்

தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க....


படிப்பகம்

www.padippakam.com

# பாதுகாப்பு — மனித உரிமைகள் என்பனவற்றின் பெயரால் சில நாடுகள் ஏனைய நாடுகளில் தலையிடுகின்றன!

## *ஐ.நா சபையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ கவலை!!*

**அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஐ.நாவின் 68ஆவது பொதுச்சபைக் கூட்டத்தொடர் நடைபெற்றபோது, இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ அதில் கலந்து கொண்டு 2013 செப்ரெம்பர் 25ஆம் திகதி நிகழ்த்திய உரையின் சர்வதேச நிலைமைகள் பற்றிய பகுதி அதன் முக்கியத்துவம் கருதி கீழே தரப்பட்டுள்ளது:**

தற்போது முழுமை பெறாமல் உள்ள உலகப் பொருளாதார முறை தொடர்பாக பரிபூரணமான கட்டமைப்பு ரீதியான புனரமைப்பு தற்போதைய யதார்த்தங்களை முற்றுமுழுதாக உள்வாங்கிக் கொள்ள வேண்டும்.

அபிவிருத்திக்காக கூட்டுப் பங்காண்மையை மீள அணிதிரட்டும் பொருட்டு நியாயமான சர்வதேச பொருளாதார முறையொன்று உலகத்திற்கு அவசியமாக இருக்கின்றது. அரச மற்றும் அரச சார்பற்ற பிரிவுகள் உயர் நிலையில் உள்ள கம்பனிகள் அதில் புதிய பங்காளர்களாகச் சேர வேண்டும். பொருளாதார அதிகாரம் மாறுவதன் காரணமாக 'வடக்கு – தெற்கு ஒத்துழைப்புக்கு' குறை நிரப்பாக 'தெற்கு – தெற்கு ஒத்துழைப்பை' செயலூக்கத்துடன் மேம்படுத்த வேண்டியது மிகத் தீர்க்கமாகும்.

ஒரு சில நாடுகள் பாதுகாப்பைக் காரணமாகக் கொண்டும், மனித உரிமைகளின் பாதுகாவலராகவும் தோன்றி வளரும் நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடும் போக்கு அதிகரித்திருப்பது சர்வதேச விவகாரங்களில் காணக்கூடியதாக இருப்பது கவலைக்குரிய விடயமாகும். இதன் பெறுபேறாக வன்முறைக்கும் அமைதியின்மைக்கும் அடையாளமாக இருக்கின்ற பலவந்தமான அரசியல் வேறுபாடுகளுக்கு காரணமாக அமைகின்ற கலவரங்களை நாம் உலகம் முழுவதிலும் தொடர்ச்சியாகக் காண்கின்றோம்.

இத்தகைய இயக்கங்கள் மேற்படி நாடுகளில் மிக நல்ல நிலைப்பாட்டிற்கு காரணமாக இருக்கின்றனவா அல்லது பொருத்தமற்ற புறக் காரணிகளால் வேறுபட்ட பெறுபேறுகளை உருவாக்கியுள்ளனவா என்பதை சிந்தித்துப் பார்ப்பதற்கான காலம் வந்துள்ளது. உண்மை யாதெனில், அதற்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் எதிர்பார்த்த நல்ல பெறுபேறுகள் கிடைக்கவில்லை. அத்துடன் இந்நாடுகளை நிலையற்றதாக்குவதற்கு உண்மையிலேயே பங்களிப்பு செய்துள்ளது என்பதாகும். ஒருதலைப்பட்சமான குழுக்கள் மற்றும் நடவடிக்கைகள் காரணமாக பாதுகாப்பு சபையின் ஆதிக்கம் சீர்குலைவுக்கு உள்ளாகாதா?

மக்களின் நல்வாழ்வுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ள துறைகளுக்கு இப்போக்கு பரவியுள்ளதன் காரணமாக அதை நிறுத்த வேண்டியுள்ளது. பெரும்பாலும் மாறுபட்ட கலாச்சாரங்கள், விழுமியங்கள், வரலாறுகள் என்பனவற்றைக் கொண்டுள்ள நாடுகளின் ஒரு வகையிலான ஜனநாயகத்தை நடத்துவதற்கு மேற்கொள்கின்ற முயற்சியின் காரணமாக இந்தக் குழப்ப நிலை உருவாகுகிறது. பல்தரப்பு பங்கேற்புடன் சர்வதேச பாதுகாப்பை உறுதி செய்வதற்கு குறிப்பாக ஐக்கிய நாடுகள் அதிகாரம் கொடுத்திருந்தபோதும், சில நாடுகளில் இது போன்ற நடவடிக்கை அவசியமில்லை.

நமது காலத்தில் இப்பங்கேற்பு முழுமையடைய வேண்டுமானால் அணுவாயுதங்கள் மற்றும் இரசாயன ஆயுதங்களின் தோற்றத்தில் நவீன விஞ்ஞானம் பகையுணர்வுடன் துஸ்பிரயோகிக்கப்படுவதற்கு எதிராக மனித வர்க்கத்தின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.




மத்திய கிழக்கில் வளர்ச்சியடைகின்ற நிச்சயமற்ற தன்மைகள் மனவேதனையை ஏற்படுத்துகின்றது. 1967ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த இரு நாடுகளினதும் எல்லைகளின் அடிப்படையில் பலஸ்தீனத்திற்கும் இஸ்ரேலுக்கும் இடையில் சமாதான சகஜீவனத்தை நாம் ஆவலுடன் எதிர்பார்த்தோம். பலஸ்தீனத்தை ஐக்கிய நாடுகளின் பூரண அங்கத்துவ நாடாக ஏற்றுக் கொள்வதற்கு இலங்கை காத்திருக்கின்றது.

மிகச் சிறந்த வாழ்க்கைத் தரத்தையும், பொருளாதார சுபீட்சத்தையும் பெற்றுக் கொள்வதற்கு ஆபிரிக்க மக்கள் எடுக்கின்ற முயற்சிகளுக்கு நாம் மரியாதை செலுத்துகின்றோம். ஆபிரிக்க மக்கள் தொடர்ந்தும் சமூக பொருளாதார வளர்ச்சியை நோக்கிச் செல்கின்ற

தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க......



படிப்பகம்


www.padippakam.com

# இந்திய ரூபா மதிப்பு வீழ்ச்சி ஏன்? எதனால்? எப்படி?

இந்தியா விடுதலைபெற்று 66 ஆண்டுகள் நிறைவு பெற்ற நாளன்று டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் பரிவர்த்தனை மதிப்பு 66க்கு வீழ்ச்சியடைந்துள்ளது எவ்வளவு பொருத்தமானது என்பது போல கிண்டலாக ஒரு நாளேடு செய்தி வெளியிட்டிருந்தது.ஏன் இந்த திடீர் சரிவு? இதற்கான கார ணங்கள் என்ன? இதனை தவிர்த்திருக்க முடியாதா? நாட்டின் பொருளாதார வளர்ச்சி மிகச் சிறப்பாக இருப்பதாக உலகமயவாதிகள் தம்பட்டம் அடித்துக் கொண்டிருந்தனரே அது என்னவாயிற்று என்பது போன்ற கேள்விகள் அடுக்கடுக்காக எழுகின்றன.

1947க்கு முன்னர் ஒரு டாலரின் மதிப்பு ஒரு ரூபாயாக இருந்தது. 1952ல் ஒரு டாலர் – ரூ4.79 என நிர்ணயிக்கப்பட்டது. 1966ல் ரூபாயின் மதிப்பை ரூ7.57 என்ற அளவுக்கு குறைக்கும் அறிவிப்பை இந்திய அரசே வெளியிட்டது. உலக வங்கியின் நிர்ப்பந்தத்துக்கு அடிபணிந்து அந்த அறிவிப்பை வெளியிட்ட அன்றைய நிதி அமைச்சர் சச்சின் சவுத்ரி அந்நிய முதலீடுகளுக்காக இந்தியத் தாய் தனது கருவறையைத் திறந்து வைத்துள்ளதாக வெட்கக் கேடான முறையில் குறிப்பிட்டதானது நாடு தழுவிய கண்டனத்தை ஏற்படுத்தியது. 1995ல் ஒரு டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு 32.42 ஆக இருந்தது. 2000 முதல் 2010 வரை இது சற்றே குறையாக ரூ.45 என்ற நிலையில் இருந்து வந்தது. 2013 ஆகஸ்டில் 50 சதவீதம் அளவுக்கு வீழ்ச்சியடைந்து ஒரு டாலர்– ரூ68 என்ற நிலையிலான கடும் சரிவை எதிர்கொண்டது. இந்திய நாட்டின் பங்குச்சந்தையில் முதலீடு செய் திருந்த அந்நிய முதலீட்டாளர்கள் கடந்த சில மாதங்களுக்குள்ளாக சுமார் 100 கோடி டாலரைத் தங்கள் நாடுகளுக்கு எடுத்துச் சென்றதே இந்த வரலாறு காணாத வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தது.. தங்கள் நாட்டு பணக் கொள்கையில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவரப்போவதாக மே 22ந் தேதியன்று அமெரிக்க ரிசர்வ் வங்கியின் தலைவர் பென் பெர்னான்கே அறிவிப்பு ஒன்றினை வெளியிட்டிருந்தார்.

2008ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடிக்குப் பிறகு அமெரிக்க நிதிச்சந்தையில் பணப்புழக்கத்தை மேம்படுத்துவதற்காக அமெரிக்க ரிசர்வ் வங்கி மாதந்தோறும் 8500 கோடி அளவிலான டாலர் நோட்டுகளை புதிது புதிதாக அச்சிட்டு சுற்றுக்கு விட்டு வந்தது. இதனை மொத்தமாகக் கணக்கிட்டால் இது 2 டிரில்லியன் டாலர் அளவுக்கு (அதாவது 2 லட்சம் கோடி டாலர்) அளவுக்கு வரும். இந்த நடைமுறையில் மாற்றம் கொண்டுவரப் போவதாக பென் பெர்னான்கே அறிவித்திருந்தார். இந்த அறிவிப்பையடுத்து அமெரிக்காவில் வட்டி விகிதம் அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பில் தான் அந்நிய முதலீட்டாளர்கள் இந்தியாவின்




பங்குச்சந்தைகளில் தாங்கள் செய்திருந்த முதலீடுகளை திரும்ப எடுத்துச் சென்றுவிட்டதாக சிலர் கருத்து தெரிவித்துள்ளனர். ரூபாயின் வீழ்ச்சி பற்றிக் கருத்து தெரிவித்துள்ள பொருளாதார வல்லுநரான பிரபாத் பட்நாய்க் பின் வரும் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். ரூபாயின் வீழ்ச்சிக்கு பென் பெர்னான்கே மே 22ந்தேதி அறிவிப்பைக் காரணமாகக் காட்டுவது சரியல்ல. ஏனெனில் ரூபாயின் மதிப்பு அதற்கு முன்னரே அதாவது 2011 செப்டம்பர் மாதத்திலிருந்தே வீழ்ச்சியடையத் தொடங்கிவிட்டது என்பதை அவர் சுட்டிக் காட்டியுள்ளார். முதலாளித்துவக் கட்டமைப்பு தொடர்பான சில விளக்கங்களையும் அவர் முன் வைத்துள்ளார். முதலீட்டிலிருந்து கிடைக்கும் வருவாய் இந்தியாவிலும் அமெரிக்காவிலும் ஒரே விகிதமாக இருந்தாலும் பணவுடைமையாளர்கள் தங்கள் செல்வத்தை இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்கு கொண்டு செல்வதையே விரும்புவார்கள். ஏனெனில் முதலாளித்துவத்தின்


படிப்பகம்

www.padippakam.com

தாயகமாக இருப்பது அமெரிக்காவே. அங்கே தங்கள் பணம் இருப்பதையே அவர்கள் விரும்புவார்கள். முதலாளித்துவத்தின் மையம் மற்றும் விளிம்பு நாடுகள் என்ற கோட்பாட்டை முன் வைத்துள்ள பிரபாத் பட்நாய்க் முதலீட்டின் மீது கிடைக்கும் வருவாய் இந்தியா போன்ற விளிம்பு நாடுகளில் கூடுதலாக இருக்கும் காலங்களிலும் தங்கள் முதலீட்டுக்கு பாதுகாப்பின்மை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் அச்சமடையும்போதும் விளிம்பு நிலை நாடுகளிலிருந்து தங்கள் பணத்தை அமெரிக்காவுக்கு கொண்டு சென்றுவிடுவார்கள்.

வேறு சொற்களில் கூறினால் முதலாளித்துவ உலகில் அடிப்படையான ஒரு சமச்சீரற்ற நிலை நிலவி வருகிறது. முதலாளித்துவத்தின் மையத்தில் இருக்கும்போது பணவுடைமையாளர்கள் தங்கள் பணத்தை மையத்திலிருந்து விளிம்பு நாடுகளுக்கு கொண்டு செல்லும் அளவுக்கு ஒரு போதும் பீதியடைவதில்லை. ஆனால் சில நேர்வுகளில் விளிம்பு நிலை நாடுகளில் பாதுகாப்பில்லை என்று பீதிக்காளாகும் போது மையத்துக்கு தங்கள் செல்வத்தை திடீரென்று மாற்றிக் கொள்வதுண்டு. சொல்லப்போனால் மையம் தான் விளிம்பு நிலை என்பது விளிம்பு நிலை தான். இதனால் தான் விளிம்பு நிலை நாடுகள் தங்கள் நாட்டுக்குள் கட்டற்ற அந்நிய மூலதன நுழைவை அனுமதிக்கக்கூடாது என்று கூறி வருகிறோம்.. ஆனால் பெரிய பொருளாதார வல்லுநராக அறியப்படும் மன்மோகன் சிங் என்ன கூறுகிறார்? சீர்திருத்தங்களை பின்னுக்குத் தள்ளப் போவதில்லை. மேலும் கடுமையான சீர்திருத்தங்களுக்கான பொதுக்கருத்தை எட்டுவதற்கு முயற்சிக்கப் போகிறேன் என்கிறார். 1991ம் ஆண்டில் நாடு இதேபோன்றதொரு நெருக்கடியை எதிர்கொண்டது. அப்போது இந்தியாவின் அந்நியச் செலாவணி இருப்பைக் கொண்டு சில வாரங்களுக்கான இறக்குமதியை மட்டுமே சமாளிக்க முடியும் என்ற நிலை. இந்த நெருக்கடியை எதிர்கொள்வதற்காக சுதந்திர வர்த்தகப் பாதை மன்மோகன் சிங்கினால் தேர்வு செய்யப்பட்டது. இதன் பகுதியாக இறக்குமதிகளுக்குக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல் இந்தியப் பங்குச்சந்தைகளில் விரும்பிய நேரத்தில் முதலீடு செய்யவும் விரும்பிய நேரத்தில் வெளியேறவும் முதலீட்டாளர்களுக்கு அனுமதி வழங்கும் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. மீண்டு மொருமுறை இது போன்ற நெருக்கடி வராமல் தடுப்பதற்கு இதுவே வழி என்று கூறப்பட்டது. கடந்த 22ஆண்டுகளாக இந்த உலகமய தாராளமயக் கொள்கைகள் பின்பற்றப்பட்ட பிறகு நடப்புக் கணக்குப் பற்றாக்குறை ரூபாய் மதிப்பு வீழ்ச்சி இறக்குமதிக்குத் தேவையான டாலர் இருப்பில் பற்றாக்குறை போன்ற பிரச்சனைகள் மீண்டும் நம்முன் தோன்றியுள்ளன. எந்த கொள்கைகள் பின்பற்றப்பட்டதால் ஒரு நெருக்கடியான சூழ்நிலை தோன்றியுள்ளதோ அதே கொள்கைகளை மேலும் தீவிரமாகக் கடைப்பிடிக்கப் போகிறேன் என்கிறார் மன்மோகன் சிங். இது கண்ணைத் திறந்து கொண்டே கிணற்றுக்குள் குதிப்பது போல் ஆகாதா? இந்தியாவில் ஏற்றுமதியை விட இறக்குமதி அதிகமாகவே தொடர்ந்து இருந்து வந்துள்ளது.

எனவே இறக்குமதியைக் குறைக்கும் வகையில் உள்நாட்டு தொழில்களை வளர்க்க கவனம் செலுத்தினார்களா? இல்லை. உட்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்கும் வேலையையும் தனியாரிடம் ஒப்படைத்தார்கள். அவர்கள் அதனை உருப்படியாக நிறைவேற்றினார்களா? அதுவும் இல்லை. வெளிநாட்டு நிறுவனங்கள் முதலீடு செய்வதற்கு ஊக்கமளித்தார்கள்.. அவர்கள் உதிரி பாகங்கள் அனைத்தையும் தங்கள் நாட்டில் உற்பத்தி செய்து அவற்றை பூட்டுவதற்கான தொழில்களைத்தான் இங்கே துவக்கினார்கள் அல்லது ஏற்கனவே செயல்பட்டுவரும் நிறுவனங்களை கையகப்படுத்திக் கொண்டார்கள். பொதுத்துறை நிறுவனங்களை தனியார்வசம் ஒப்படைப்பதில் ஆர்வம் காட்டினார்களேயொழிய ஏராளமான நிதி ஆதாரங்களைக் கொண்ட பொதுத்துறை நிறுவனங்களின் மூலதனத்தைப் பயன்படுத்தி பொதுத்துறைத் தொழில்களை மேலும் வளர்ப்பதற்கு ஆட்சியாளர்கள் முயற்சித் தார்களா? இல்லையே! இன்று நடப்புக் கணக்குப் பற்றாக்குறையைப் பற்றி வாய் கிழியப் பேசும் ப.சிதம்பரம் கடந்த மூன்று ஆண்டு களாக அதைக் கட்டுப்படுத்த என்ன நட வடிக்கைகளை மேற்கொண்டார். மாறாக நடப்புக் கணக்குப் பற்றாக்குறையை அதிகரிக்கும் விதத்தில் தானே செயல்பட்டார்? ரூபாய் மதிப்பு தொடர்ந்து குறைவதற்கு அனுமதிக்கப்படுமானால் இறக்குமதி செய்யப்படும் பெட்ரோலியப் பொருட்களின் விலை மேலும் தொடர்ந்து அதிகரிக்கும். இதன் தொடர் விளைவாக அனைத்து அத்தியாவசியப் பொருட்களின் விலையும் தொடர்ந்து ஏற்றமடையும். இதன் காரணமாக மக்களின் வாங்கும் சக்தி குறையும் உள்நாட்டு உற்பத்திப் பொருட்களின் விற்பனையில் வீழ்ச்சி ஏற்பட்டு அவை நலிவடையும் நிலை ஏற்படும் நுகர்வுப் பொருட்களின் விற்பனை 2012 ஜூன் மாதத்தில் இருந்ததை விட தற்போது சுமார் 25 சதவீதம் குறைந்துள்ளது. மத்திய தரவர்க்கத்தினர் பயன்படுத்திவரும் சலவை இயந்திரங்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், மின்சார அடுப்புகள் போன்றவை மட்டுமின்றி கார்களின் விற்பனையும் 10 சதவீதம் குறைந்துள்ளது. இது தொழில்களின் சீரழிவுக்கும் வேலையின்மை அதிகரிப்புக்குமே இட்டுச் செல்லும். கடும் விலைவாசி ஏற்றத்தால் சாமானிய மக்களின் வாழ்க்கை நிலை பெரும் துயரமாக மாறிவிடும். ரூபாய் மதிப்பு குறைவது உடனடியாக தடுத்து நிறுத்தப்படவேண்டும். மேலும் கடுமையான சீர்திருத்தங்களை அமல்படுத்துவதன் மூலம் இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை சமாளிக்க முடியாது. அவசியமற்ற இறக்குமதிகளுக்கு தடை


படிப்பகம்

www.padippakam.com

விதிக்கப்படவேண்டும்.

பொது முதலீட்டை அதிகரிப்பதன் மூலம் இறக்குமதி செய்யப் படும் பொருட்களுக்கு மாற்றான பொருட்கள் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட வேண்டும். தனியார் துறையிடமே விட்டு விடாமல் உள்கட்டமைப்பு வசதிகளை அதிகரிப்பதற்கு அரசாங்கம் போதிய அளவில் முதலீடு செய்யவேண்டும். பொதுத்துறை நிறு வனங்களிடம் குவிந்து கிடக்கும் மூலதனத்தை பயன்படுத்தி பொதுத்துறைத் தொழில்களை மேலும் வளர்க்கவேண்டும். இவையனைத்தும் நவீன தாராளமயக் கொள்கைகளிலிருந்து விலகிச்செல்வதாக இருக்குமே என்று அவ்வாறு செயல்படத் தவறினால் இன்று நாடு சந்தித்து வரும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டுவர முடியாது.

நன்றி: தீக்கதிர் (இந்திய மார்க்சிஸ்ட கம்யூனிஸ்ட் கட்சியின் நாளிதழ்)

4ம் பக்கத்தொடர்ச்சி...

உற்பத்தியாளர்களை நாசமாக்கி மொசாம்பிக்கிலும் எத்தியோப்பியாவிலும் வளர்ச்சியை இல்லாமல் செய்துள்ளது. வொசிங்டனால் மானியம் அளிக்கப்படும் அமெரிக்க பகாசுர விவசாயத் தொழிலுடன் ஆபிரிக்க விவசாயிகள் இலேசில் போட்டிபோட முடியாது. இதன் விளைவாக முன்னாள் தோட்ட உரிமையாளர்களும் விவசாயிகளும் வறுமைக்கும் பசிக்கும் உள்ளாகி அமெரிக்க உதவிக்காக கையேந்தி நிற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இது அமெரிக்க அரசாங்கம் பசிப் பிரச்சினையை வைத்து எவ்வாறு பெரும் இலாபத்தை ஈட்டுகிறது என்பதைக் காட்டுகிறது. ஒரு நியாயமான கேள்வி, உலகின் மிகவும் சக்திவாய்ந்த நாடு ஏன் இதற்காகப் போராடுகின்றது? பசியால் வாடுபவர்களின் தொகை உலகில் வருடந்தோறும் அதிகரித்துச் செல்வது ஏன்?

நன்றி: பிராவ்தா – ரஸ்யா (Pravda – Russia)
தமிழில்: வாமனன் *

## இசையை இரசிப்பதற்கு இசையியல் அறிவு தேவையா?

ஸ்ட்ராவின்ஸ்கி ஒருமுறை சொன்னாராம்: "என்னுடைய இசையைக் குழந்தைகளும் மிருகங்களும்தான் நன்றாகப் புரிந்து கொள்கிறார்கள்".
(தமிழிசை வேர்கள் – நா.மம்மது)

இதையே வேறுவிதமாக தமிழ் திரை இசையின் ஆரம்பகர்த்தாவான ஜி.ராமநாதன் பின்வருமாறு இயம்புகிறார்:
"இராகம் தெரிந்து ரசிப்பது ஒருவிதம். கட்டற்ற உணர்வுக் கடலில் மிதப்பது இன்னொருவிதம்.
இராகங்கள் பாடனுபவத்தை ஏந்தி வருகின்ற கிண்ணங்கள்தான். கிண்ணத்தில் இருக்கும் பாயாசத்தை சுவைப்பதுதான் முக்கியம். கிண்ணத்தின் வடிவமும், வண்ணமும் முக்கியமல்ல."
மேலும், "இப்போது இராகத்தைத் தெரிஞ்சு கொண்டு என்ன பண்ணப் போறீங்க?" என்று ராமநாதன் ஒருவரிடம் கேட்டாராம்.
('சங்கீதச் சக்கரவர்த்தி ஜி.ராமநாதன்' என்ற நூலிலிருந்து) *

5ம் பக்கத்தொடர்ச்சி...

பயணத்தின்போது, இலங்கை அவர்களுக்குத் தொடர்ச்சியாக ஆதரவு வழங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாடுகள் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதார மற்றும் தடைகள் போன்ற ஒருதலைப்பட்சமான நடவடிக்கைகள் கவலையை ஏற்படுத்துகின்றன. இத்தகைய நடவடிக்கைகள் தனித்துவமாக இலக்கு வைக்கப்பட்டவர்களுக்கு மட்டுமின்றி, எத்தகைய நியாயமும் இல்லாமல் மனித வர்க்கத்தின் பெரும்பான்மையானவர்களுக்கு பெரும் துன்பங்களை ஏற்படுத்துகின்றது.

பொருளாதார கஸ்டங்களை வெற்றி கொள்வதற்கும், பொருளாதார வாய்ப்புகளை முழுமையாகப் பெற்றுக் கொள்வதற்கும் மேற்கொள்கின்ற முயற்சிகளுக்காக நான் மீண்டுமொருமுறை கியூப மக்களுடன் ஒத்துழைப்புடன் எழுந்து நிற்கின்றேன்.எமது நாட்டின் வட மாகாணத்தில் வாழ்கின்ற மக்களுக்கு மாகாண சபைக்கான தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்து கொள்வதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் நடைபெற்ற தேர்தலின்போது கிடைத்த சந்தர்ப்பமானது இது தொடர்பான முக்கிய நிகழ்வாகும். சுமார் கால் நூற்றாண்டின் பின்னர் அதை செய்யக் கிடைத்தமை எனக்குச் சட்டபூர்வமான திருப்தியைத் தரும் விடயமாகும். அரசியல் அதிகாரமளித்தல் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் ஆகிய விடயங்களை கவனத்தில் எடுத்துக் கொள்கின்றபோது, இந்த நடவடிக்கையின் தீர்க்கமான முக்கியத்துவத்தைப் பற்றி சந்தேகம் இருக்க முடியாது. இலங்கைவாழ் அனைத்து மக்களின் நன்மைக்காக இம்முயற்சிக்கும் அவற்றின் வெற்றிக்கும் உதவுவதற்கு சர்வதேச சமூகத்திற்கு தெளிவான பொறுப்பு இருக்கிறது.

தெளிவாகக் காணக்கூடியதாக இருக்கின்ற முன்னேற்றத்தையும், ஐக்கிய நாடுகளின் பொறிமுறையுடன் நிலைபேறான பங்களிப்பையும் பொருட்படுத்தாமல் இலங்கை மீது சாட்டப்படுகின்ற சமச்சீரற்ற தெரிவிப்பைப் பற்றியும், பல்தரப்பு வரையறையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற சமநிலையற்ற கவனிப்பைப் பற்றியும் பல நாடுகள் ஆச்சரியப்படுகின்றன.

இந்த இடைவெளியில்லாமல் பின் தொடர்கின்ற அடிப்படையும் கேள்விக்குட்படுத்தப்படுகிறது. பயன்பாட்டுத் தரத்தின் நிலைபேறான தன்மையை சான்றுப்படுத்தும் பொருட்டு ஐக்கிய நாடுகளின் முறையைத் துணிச்சலுடன் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அவ்வாறு செய்கின்றபோது, தமது நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றிக் கொள்வதற்கு அக்கறை காட்டுகின்ற தரப்பினர் ஐக்கிய நாடுகளின் முறையை முறைகேடாகப் பயன்படுத்துகின்றனர் என்பதற்கு சந்தேகம் நிலவுவதற்குள்ள வாய்ப்புகள் இல்லாமல் போகும்.
*


படிப்பகம்

www.padippakam.com

# மாகாணசபைத் தேர்தலில் வி.ஆனந்தசங்கரி தோற்கடிக்கப்பட்டதற்கான காரணங்கள்!

நடந்து முடிந்த வட மாகாணசபைத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும், முன்னாள் கிளிநொச்சித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி மிக மோசமாகத் தோல்வியைத் தழுவியுள்ளார். அவர் பெற்ற விருப்பு வாக்குகள் இரண்டாயிரத்துக்குச் சற்றுக் கூடுதலாகவே இருந்தது. அதேநேரத்தில் அரசியலில் முன்பரிச்சயம் இல்லாத சிலர் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பாக கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஆனந்தசங்கரி பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோது மட்டும் கிளிநொச்சி மாவட்டத்திற்கு (அவரது முயற்சியாலேயே கிளிநொச்சி தனி மாவட்டம் ஆக்கப்பட்டது) சேவை செய்தவர் அல்ல. அதற்கு முதல் அவர் கரைச்சி கிராமசபைத் தலைவராகவும் பின்னர் கிளிநொச்சி பட்டினசபைத் தலைவராகவும் இருந்து அந்தப் பிரதேச மக்களுக்கு தன்னால் இயன்ற சேவைகளைச் செய்தவர். அப்படியான ஒருவர் மிக மோசமாகத் தோற்கடிக்கப்பட்டது ஏன் என்ற கேள்வி எழுவது இயல்பானது.

தமிழர் விடுதலைக் கூட்டணியைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதில் எழுந்த இழுபறி நீதிமன்றம் வரை சென்று, அக்கட்சி ஆனந்தசங்கரிக்கு சொந்தமாக, அவரை எதிர்த்த இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா போன்றோர் தமது தமிழரசுக் கட்சியை மீண்டும் புதுப்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது வரலாறு. அதன் பின்னரே புலிகள் தமிழரசுக் கட்சியையும் வேறு சில முன்னாள் ஆயுதப் போராட்டக் குழுக்களையும் இணைத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற அமைப்பை உருவாக்கினர். ஆனால் ஆனந்தசங்கரி அதற்குள் போகாததுடன், தொடர்ந்தும் புலிகளை வன்மையாக எதிர்த்தும் வந்தார்.

இதனால் ஆத்திரமடைந்த புலிகள், ஆனந்தசங்கரியைத் தீர்த்துக்கட்ட சந்தர்ப்பம் பார்த்திருந்ததுடன், அவரது கட்சி சார்பாக யாழ் மாநகர சபை முதல்வர்களாகப் பதவி வகித்த சிவபாலன், சரோஜினி யோகேஸ்வரன் போன்றோரையும் கொலை செய்தனர். பின்னர் அவரது கட்சி சார்பாக யாழ்.மாநகர முதல்வரான செல்லன் கந்தையன் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதற்காக அவரது காலத்தில் புனரமைக்கப்பட்ட யாழ்.பொது நூலகத்தை அவரது தலைமையில் ஆனந்தசங்கரி திறந்து வைப்பதையும் தடுப்பதற்காக நூலகத் திறப்பையும் பலவந்தமாகப் பறித்துச் சென்றனர்.

இலங்கை அரசாங்கம் ஆனந்தசங்கரிக்கு வழங்கிய பலத்த பாதுகாப்பு காரணமாகவே புலிகளின் கொலைத் தாக்குதலிலிருந்து அவர் தப்பிப் பிழைத்தார். அவர் மட்டுமின்றி தற்பொழுது வட மாகாணசபைக்கு தெரிவான புளொட் தலைவர் த.சித்தார்த்தன், பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி முக்கியஸ்தர்கள் என்போரும் புலிகள் இருந்தவரை கொழும்பில் அரச பாதுகாப்பிலேயே வாழவேண்டிய நிலையில்தான் இருந்தனர்.




புலிகள் 2009 மே மாதம் 18ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் வைத்து அழிக்கப்பட்ட பின்னர், புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றாக தமிழ் ஜனநாயக சக்திகளின் ஐக்கியம் உருவாக்கப்படுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. 'தமிழ் கட்சிகளின் அரங்கம்' என்ற பெயரில் அமைப்பொன்று உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பில் ஈ.பி.டி.பி, தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி போன்ற கட்சிகளும், தனிப்பட்ட முறையில் எஸ்ஜே.வி. செல்வநாயகத்தின் புதல்வர் எஸ்சி.சந்திரகாசன் போன்றோரும் அங்கம் வகித்தனர்.

இந்த அமைப்பு பற்றி மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கைகள் துளிவிடத் தொடங்கிய நிலையில் திட்டமிட்ட நோக்கங்களுடன் புலிகளினதும் ஐக்கிய தேசியக் கட்சியினதும் தீவிர விசுவாசிகளான எம்.கே.சிவாஜிலிங்கமும், மனோகணேசனும் இதில் இணைந்து கொண்டனர். பின்னர் இந்த அமைப்புடன் சேர்ந்து செயல்பட விரும்புவதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பும் நாடகமாடியது. ஆனால் இறுதியில் நடந்தது என்னவெனில் சிவாஜிலிங்கம், மனோகணேசன், தமிழ் தேசிய கூட்டமைப்பு எல்லோரும் சேர்ந்து இந்த தமிழ் கட்சிகளின் அரங்கை திட்டமிட்ட முறையில் சதி சூழ்ச்சிகள் மூலம் மரணிக்க வைத்ததுதான்.

அதன்பின்னர் ஆனந்தசங்கரியும், சித்தார்த்தனும் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இணைய முயற்சிகள் மேற்கொண்டு அதில் இணைந்தும் கொண்டனர். அந்த


படிப்பகம்

www.padippakam.com

இணைவின் பின்னர் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தல்கள், பாராளுமன்றத் தேர்தல் என்பவற்றில் இவர்கள் இருவரையும் தமது வெற்றிக்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பு நன்கு பயன்படுத்திக்கொண்டது.

தற்பொழுது நடந்து முடிந்துள்ள வட மாகாணசபைத் தேர்தலில் சித்தார்த்தன் வெற்றி பெற்ற தமிழ் தேசிய கூட்டமைப்பு வேட்பாளர்களின் விருப்பு வாக்குகள் வரிசையில் மூன்றாவது ஸ்தானத்தில் இருக்க, ஆனந்தசங்கரி மிகவும் மோசமாகத் தோல்வியடைந்ததிற்கு என்ன காரணம்? அதுவும் அங்கு போட்டியிட்டு தோல்வியைத் தழுவிய ஒரு ஈ.பி.டி.பி வேட்பாளரை விடவும் குறைவான வாக்குகள் பெற்றதிற்கு என்ன காரணம் என்ன?

ஆனந்தசங்கரியும், சித்தார்த்தனும் மிகவும் பிந்திய காலத்திலேயே தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இணைந்து கொண்டவர்கள். இருந்தும் யாழ்ப்பாணிய மேட்டுக்குடி குழாம் சித்தார்த்தனை அள்ளி வாரி அரவணைத்துக் கொள்ள, அவரைவிடவும் வயதும், அரசியல் முதிர்ச்சியும் அதிகமான ஆனந்தசங்கரியை நிராகரித்தது ஏன்? இவ்வளவிற்கும் ஆனந்தசங்கரியும் அச்சுவேலி தோப்பைச் சேர்ந்த 'சுண்டியெடுத்த' சைவ வேளாள குடும்பம் ஒன்றைச் சேர்ந்தவர்தான்.. (சித்தார்த்தனின் தகப்பனார் வி.தர்மலிங்கம் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து ரெலோ இயக்கத்தால் படுகொலை செய்யப்பட்டவர். ஆனந்தசங்கரியின் தகப்பனார் வீரசிங்கம் மாஸ்டர் மிகப்பிரபலமான தமிழரசுக்கட்சி ஆதரவாளராவார்)

இந்த இடத்தில்தான் ஆனந்தசங்கரிக்கும் சித்தார்த்தனுக்கும் இடையிலான அரசியல் பின்னணியிலுள்ள வேறுபாட்டை அடையாளம் காண முடியும். சித்தார்த்தன் தமிழரசுக்கட்சியின் வழி வந்தவர். ஆனால் ஆனந்தசங்கரி அப்படியல்ல. அவரது அரசியல் வரலாறு லங்கா சமசமாஜக்கட்சி என்ற இடதுசாரிக் கட்சியுடன்தான் ஆரம்பமாகியது. அவர் ஆரம்பத்தில் கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் ஐ.தே.க வேட்பாளர் சுகததாசவை (பின்னர் கொழும்பு மாநகரசபை முதல்வராக இருந்தவர்) எதிர்த்துப் போட்டியிட்டவர். பின்னர் 1965 பொதுத்தேர்தலில் சமசமாஜக்கட்சி சார்பில் கிளிநொச்சி தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்தார். பின்னர் அதிலிருந்து விலகி 1970 பொதுத்தேர்தலில் தமிழ் காங்கிரஸ் கட்சி சார்பில் கிளிநொச்சி தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். எனவே அவரை ஒரு 'துரோகி'யாகவே தமிழரசுக்கட்சியினர் அன்றிலிருந்து வருணித்து வந்துள்ளனர். அதை இன்னமும் அவர்கள் கைவிடவில்லை என்பதையே அவரது மாகாணசபைத் தேர்தல் தோல்வி நிரூபித்துள்ளது.

ஆனந்தசங்கரியை 'துரோகி' என தமிழரசுக்கட்சியினர் வருணித்து வந்ததிற்கு ஒரு உதாரணம்: ஆனந்தசங்கரி 1971இல் தமிழ் காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபொழுது, யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் மாநாட்டு கவியரங்கில் கவிதை பாடிய தமிழரசுக்கட்சியின் ஆஸ்தான கவிஞரான (பின்னர் புலிகளின்) காசி ஆனந்தன் பின்வருமாறு தனது கவிதையில் வசை பாடியுள்ளார்:

***"அக்கிராயன் குளத்தில் அரக்கர்களைக் குடியேற்றி***
***பொற்களனித் தமிழர் பூமிதன்னைச் சுரண்ட***
***தக்க திட்டம் போட்ட அதிகார ஆட்சிக்கு***
***மக்கள் ஒருவர் மானமில்லா அடிவருடி***
***கொக்கரித்த கூச்சலும் கேட்டோமே!***
***சங்கரி சங்கரி சம்போ!***
***சங்கரி சங்கரி சம்போ!"***

(இங்கு அக்கிராயன்குளத்தில் அரக்கரை குடியேற்றுவது பற்றி காசி ஆனந்தன் குறிப்பிடுவது, 1971இல் நடைபெற்ற ஜே.வி.பியின் ஆயுதக்கிளர்ச்சியைத் தொடர்ந்து கைதுசெய்யப்பட்ட சிங்கள இளைஞர்களை அன்றைய அரசாங்கம் அக்கிராயன் குளத்தில் முகாம்கள் அமைத்து புனர்வாழ்வு அளித்தது பற்றியதாகும். பின்னர் அந்த முகாம்கள் மூடப்பட்டுவிட்டன. இதற்கும் ஆனந்தசங்கரிக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லாதிருந்த போதும், தமிழரசுக்கட்சி கவிஞர் இவ்வாறு அவதூறு பொழிந்துள்ளார்)

பின்னர் அ.அமிர்தலிங்கம், மு.சிவசிதம்பரம் போன்றோரை புலிகள் சுட்டு, அமிர்தலிங்கம் மரணித்த நிலையில், சிவசிதம்பரம் இந்தியாவுக்கு தப்பி ஓடி அங்கு தங்கியிருந்தார். பின்னர் புலிகள் அளித்த 'மன்னிப்பை' ஏற்று சிவசிதம்பரம் இலங்கை திரும்பி தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராக சிறிது காலம் இருந்து மரணித்த பின்னர் ஆனந்தசங்கரி கூட்டணியின் தலைவரானார். ஆனந்தசங்கரியைப் பொறுத்தவரையில் இப்பதவி என்பது தற்செயலாகக் கிடைத்த ஒன்றாகும். இருந்தும் சிவசிதம்பரம், சம்பந்தன், மாவை சேனாதிராசா போன்றோரைப் போல ஆனந்தசங்கரி புலிகளின் வாலைப் பிடித்துத் தொங்காததுடன், புலிகளை துணிகரமாக எதிர்த்தும் நின்றார்.

இந்த நிலைப்பாடுதான் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆனந்தசங்கரியை முன்னர் திட்டமிட்டு ஓரங்கட்டவும், பின்னர் தற்போதைய மாகாணசபைத் தேர்தலில் திட்டமிட்டு தோற்கடித்ததிற்கும் காரணமாகும். அதனால்தான் கூட்டமைப்பின் கிளிநொச்சிப் பகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தலைமையிலான குழுவினர் வெளிப்படையாகவே ஆனந்தசங்கரிக்கு எதிராக வேலை செய்து அவரை மாகாணசபைத் தேர்தலில் மோசமாகத் தோற்கடித்தனர். ஆனால் சித்தார்த்தனை அவர்கள் தோற்கடிக்காததிற்குக் காரணம், அவர் தமிழரசுக்கட்சி வழி வந்தவர் என்பது மட்டுமின்றி, யாழ்ப்பாணியத்தின் விருப்புக்குரிய புலிகள் போன்ற இன்னொரு இயக்கமான புளொட்டின் தலைவராகவும் இருப்பதுதான்.

எனவே ஆனந்தசங்கரியை தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் திட்டமிட்ட முறையில் தோற்கடித்தது தற்செயலான ஒரு நிகழ்வு அல்ல. அது முழுக்க முழுக்க அரசியல்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...


படிப்பகம்

www.padippakam.com

## கிழியும் முகத்திரை

# பெரிய அண்ணனின் இன்டர்நெட் உளவு!

— ரமணன்




நீங்கள் தமிழனா, மலையாளியா, பெங்காளியா யாரா இருந்தால் என்ன? உங்களின் இ மெயில், ஃபேஸ்புக், டுவிட்டர், புளொக், இன்டர்நெட்டில் அனுப்பப்படும் போட்டோக்கள், ஸ்கைப்பில் பேசுவது, யு டியுபில் பார்ப்பது, அனுப்புவது எதுவாக இருந்தாலும் அமெரிக்க உளவுத்துறையால் எப்போது வேண்டுமானாலும் சர்வரிலிருந்து நேரடியாகப் பெற்றுப் பார்க்க முடியும். தொடர்ந்து கண்காணிக்கவும் முடியும். அதற்கான அதிகாரமும் அத்தனை வசதிகளும் அவர்களிடம் இருக்கிறது. ஆப்பிள், மைக்ரோசாஃப்ட், கூகுள், யாகூ போன்ற எல்லா நிறுவனங்களும் இதற்கு உதவ ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கின்றன. இந்தத் திட்டத்துக்கு 'பிரிசம்' (PRISM) என்று பெயர்.

'உலகம் முழுவதும் உள்ள தனிமனிதர்களின் சுதந்திரத்தில் தலையிடும் மிகப்பெரிய குறுக்கீடு, மனித உரிமை மீறல் இது' என்ற அதிர்ச்சியான தகவலை, புகழ்பெற்ற தினசரி 'கார்டியன்' வெளியிட்டது. 'கார்டியன்' இதழ் அதன் நம்பகமான செய்திகளுக்கும், ஆணித்தரமான தலையங்கங்களுக்கும் பெயர் பெற்றது. தொடர்ந்து 'வாசிங்டன் போஸ்ட்' தினசரியும் இதுபற்றி ஒரு கட்டுரையை வெளியிட்டது.

NSA தேசிய பாதுகாப்பு ஏஜென்ஸி என்பது அமெரிக்க உளவுத்துறையின் ஒரு அங்கம். 1952லேயே தொடங்கப்பட்ட இது, முதல் 20 ஆண்டுகள் எங்கிருந்து இயங்குகிறது என்பதே தெரியாத அளவுக்கு ரகசியமானதாக இருந்தது. NSA என்றால் 'நோ ஸச் ஏஜென்சி' என்றுகூட கிண்டல் செய்யப்பட்டது. 1975 முதல் இது வெளிநாடுகளில் அமெரிக்கப் பாதுகாப்புக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடும் சந்தேகத்துக்குரிய நபர்களின் செய்தித் தொடர்புகளைக் கண்காணிக்கிறது. அமெரிக்க மக்களின் தனிநபர் சுதந்திரத்தில் தலையிடுவதில்லை என்று இதன் அன்றைய தலைவர் நாடாளுமன்றத்தில் ஆஜராகித் தெரிவித்தார். ஆனால் இந்த நிறுவனம்தான் இப்போது அமெரிக்கா மட்டுமில்லை, உலகம் முழுவதும் உள்ள அத்தனை பேரின் அந்தரங்கத்துக்குள் ஊடுருவும் சர்வ வல்லமை பெற்றிருக்கிறது. இது அமெரிக்க அதிபரின் அனுமதியையும் பெற்றிருக்கிறது என்கிறது கார்டியன். என்.எஸ்.ஏ இன்று ஆண்டுக்கு 20 கோடி டாலர் பட்ஜெட்டில் 1000 பேருக்கு மேல் பணியாற்றும் (பலர் ராணுவ சேவை என்ற போர்வையில்) நிறுவனம். பல வெளிநாடுகளில் அலுவலகங்கள் நிறுவி உலகின் மிகப்பெரிய கண்காணிப்பு நிறுவனமாக பிரமாண்டமாக வளர்ந்திருக்கிறது. இதன் கண்காணிப்புப் பட்டியலில் ஐந்தாவது இடத்தில் இருப்பது இந்தியா. கடந்த மார்ச் மாதம் மட்டும் இவர்கள் ஆராய்ந்திருப்பது 63 லட்சம் இந்தியச் செய்திகளை!

அமெரிக்கச் சட்டத்தின்படி அமெரிக்கரின் அல்லது வெளிநாட்டவரின் தொலைபேசி மற்றும் எந்த ஒரு செய்தித் தொடர்புகளையும் கண்காணிக்க வேண்டுமானால் அரசு அதற்கென மட்டுமே இயங்கும் கோர்ட்டில் ரகசிய ஆணையை வாரன்ட்டாகப் பெற வேண்டும். இது செனட் கமிட்டிக்குத் தெரிவிக்கப்படும். ஆனால் இப்போது இது என்.எஸ்.ஏவின் நடவடிக்கைகளுக்குப் பொருந்தாது என அமெரிக்க அதிபர் விசேச அதிகாரம் அளித்திருக்கிறார். அதனால் அவர்கள் எப்போது வேண்டுமானாலும் யாருடைய இன்டர்நெட் கணக்கையும் கண்காணிக்க முடியும். இந்த அதிகாரம் புஸ் அதிபராக இருந்தபோது வழங்கப்பட்டது. ஒபாமா அதன் ஆயட்காலத்தை இப்போது நீடித்திருக்கிறார். ஒபாமா தன் முதல் தேர்தலில் 'புஸ் நிர்வாகத்தில் அமெரிக்க மக்களின் தனி உரிமைகளில் அரசாங்கத்தின் தலையீடுகளை' கண்டித்தவர்.

செய்தி வெளியாகி ஊடகங்கள் கலக்கிக் கொண்டிருந்தபோது, 'பிரிசம்' பற்றி எங்களுக்குத் தெரியாதே! நாங்கள் கோர்ட் கேட்கும் தகவல்களை மட்டுமே கொடுப்போம். எங்கள் வாடிக்கையாளர்களின் செய்திகளை நாங்கள் யாருடனும் பகிர்ந்து கொள்வதில்லை என எல்லா இன்டர்நெட் சேவை நிறுவனங்களும் தெரிவித்தன. எல்லா கம்பனிகளின்

தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க......

www.padippakam.com

# யாழ்.மாவட்டத்தில் குற்றச் செயல்கள் அதிகரிப்பு!

வடக்கு கிழக்கில் போர் முடிவுற்று மக்களின் சுதந்திரமான வாழ்வு உறுதிப்படுத்தப்பட்ட பின்னர், யாழ்ப்பாண மாவட்டத்தில் குற்றச்செயல்களும் சுதந்திரமாக அதிகரித்துச் செல்கின்றன. பொது அமைப்புக்கள் சமூகப் பொறுப்புணர்வுடன் செயல்பட்டு பொதுமக்களுக்கு, குறிப்பாக இளைஞர்களுக்கு சரியான வழிகாட்டுதல்களையும், நெறிப்படுத்தல்களையும் வழங்காமையும், தமது விவகாரங்களை மட்டுமே பார்த்துக்கொண்டால் போதும் என்ற மனோபாவம் மக்கள் மத்தியில் மேலோங்கிச் செல்வதாலும், இதற்கெல்லாம் அடிப்படையான உலகமயமாக்கத்துடன் கூடிய நுகர்வுக் கலாச்சாரம் மேலோங்கியுள்ளதாலும்தான் இந்த சமூகச் சீரழிவுகள் ஏற்பட்டுள்ளதாக சில சமூக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் குற்றச்செயல்கள் அதிகரித்துச் செல்வதற்கு இதோ ஓர் உதாரணம். அண்மையில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட யாழ்.மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்ரி ஒரு வாரத்தில் (ஒக்ரோபர் இரண்டாவது வாரத்தில்) மட்டும் யாழ்ப்பாணம், காங்கேசன்துறை பொலிஸ் பகுதிகளில் 204 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். கைது செய்யப்பட்டுள்ளவர்கள் புரிந்துள்ள குற்றச் செயல்களின் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| பாலியல் துஸ்பிரயோகம் செய்தோர் | 2 பேர் |
| வீதி விபத்து தொடர்பில் | 3 பேர் |
| மோசடி தொடர்பில் | 2 பேர் |
| களவு தொடர்பில் | 3 பேர் |
| சந்தேகத்தில் பேரில் | 31 பேர் |
| பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள் | 27 பேர் |
| குடிபோதையில் வாகனம் செலுத்தியோர் | 4 பேர் |
| சட்டவிரோதமாக சாராயம் விற்றோர் | 10 பேர் |
| கொள்ளைச் சம்பவம் சம்பந்தமாக | 1 நபர் |
| துவக்கு வைத்திருந்தது சம்பந்தமாக | 1 நபர் |
| திருட்டுத்தனமாக மின்சாரம் பெற்றவர்கள் | 9 பேர் |
| அடித்துக் காயப்படுத்தியது தொடர்பாக | 30 பேர் |
| நஸ்டம் ஏற்படுத்தியது சம்பந்தமாக | 1 நபர் |
| சூழலை மாசுபடுத்தியது தொடர்பாக | 1 நபர் |
| கலகம் விளைவித்தனர் என | 3 பேர் |
| கடத்தல் தொடர்பில் | 1 நபர் |
| சமாதானத்தை சீர்குலைத்தோர் | 7 பேர் |
| வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்தோர் | 2 பேர் |
| கத்தியால் வெட்டிய குற்றச்சாட்டில் | 3 பேர் |
| வேறு பல்வேறு குற்றங்களுக்காக | 53 பேர் |

இந்தவிதமான போக்கு அதிகரித்துச் செல்லுமானால், தமிழ் சமூகம் விரைவில் தன்னைத்தானே அழித்துக்கொள்ளும் நிலை தோன்றும் எனப் பலரும் கவலை வெளியிட்டுள்ளனர். இப்படியான குற்ற மனோபாவத்தை இளைஞர்கள் மத்தியில் விதைத்ததில் முக்கியமான பங்கு ஆயுதப் போராட்ட இயக்கங்களுக்கு, குறிப்பாக புலிகளுக்கு உண்டு என்பது மறுக்க முடியாத உண்மை. புலிகள் அழிந்துவிட்டாலும், அவர்களின் மிச்சசொச்சங்களாக தமிழ் தேசியக் கூட்டமைப்பில் உள்ள சிலர் திரும்பவும் திரும்பவும் மக்களை வன்செயல்பாதையில் தூண்டிவிடும்படியாகப் பேசி வருகின்றனர். அவர்கள் மீண்டும் தமிழ் சமூகத்தை அழிவுப்பாதையில் இட்டுச் செல்வதை விடுத்து, மக்கள் மத்தியில் ஆரோக்கியமான நிலைமையை உருவாக்கப்பாடுபடுவது அவர்களது தலையாய கடமையாகும்.

**புனிதன்**

11ம் பக்கத்தொடர்ச்சி...

அறிக்கைகளும் ஒரே மாதிரியான வாசகங்களைக் கொண்டிருப்பதிலிருந்தே உண்மை புரியவில்லையா? எனக் கேட்கிறது வாசிங்டன் போஸ்ட். அமெரிக்க அதிபர் ஒபாமா ‘தேச நலனுக்காகச் செய்யப்படும் விசயங்களில் எந்த நிர்வாகமும் 100% பாதுகாப்பும், 100% தனி உரிமையும், 0% யாருக்கும் தொல்லையில்லாத வாழ்க்கையும் அளிக்க முடியாது’ என்று சொல்லி இருப்பது அவரின் ஆசியுடன்தான் இந்த விசயங்கள் நடைபெறுகின்றன என்பதை உறுதி செய்கிறது. பிரிசம் பிரிவினருக்கு பயிற்சி அளிக்க தயாரிக்கப்பட்டிருந்த 41 ஸ்லைடு (Power point slides) கள் கார்டியனிடம் சிக்கியதால் வெளிச்சத்துக்கு வந்த விசயம் இது. எப்படி இந்த அதி ரகசிய ஆவணம் லீக் ஆனது என்பதை விசாரிக்க உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. ‘மக்கள் நலன் கருதி சொன்னது நான்தான்’ என எட்வர்ட் ஸ்னோடென் என்பவர் அறிவித்திருக்கிறார். இவர் என்.எஸ்.ஏவின் முன்னாள் ஊழியர்.

இணைய உலக வாசிகள் அதிர்ந்து போயிருக்கிறார்கள். அமெரிக்காவில் எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் இப்பிரச்சினையை எழுப்பக் காத்திருக்கின்றன. மீடியாக்கள் எதிர்க் குரல் எழுப்பக் காத்திருக்கின்றன. இந்தியாவில் அகில இந்திய சேவை வழங்குவோர் சங்கம், அமைச்சர் கபில் சிபலைச் சந்தித்து, பிரச்சினை குறித்து பேச இருக்கிறார்கள்.

எது எப்படியோ...இனி மெயில் எழுதும்போதும் ஃபேஸ்புக் கமெண்ட் போடும்போதும் ஜாக்கிரதையாக (தலைவர் ஒபாமா வாழ்க?) எழுதுங்கள். பெரிய அண்ணன் பார்த்துக் கொண்டிருக்கிறார்.


நன்றி: ‘கல்கி’ வார இதழ் (30 ஜூன் 2013)

**“ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்திற்குள்ள ஒரே ஒரு ஆயுதம், அதன் ஸ்தாபன பலம் மட்டுமே”**

**லெனின்**


படிப்பகம்

www.padippakam.com




# போருக்குப் பிந்தைய வடபகுதிக் கிராமங்களின் நிலைக்கு ஓர் உதாரணம்!

அண்மையில் 'வானவில்' ஆசிரிய குழு உறுப்பினர் ஒருவருக்கு கடந்த பல ஆண்டுகளாக கலை இலக்கிய, சமூக செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் இயக்கச்சிப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் எழுதிய கடிதத்தை அதன் முக்கியத்துவம் கருதிக் கீழே பிரசுரிக்கின்றோம். இயக்கச்சிப் பகுதியில் உள்ள முகாவில் என்ற குக்கிராமத்துக்கு மின்சாரம் வழங்கப்பட்டதனைத் தெரிவிப்பதற்காகவே இக்கடிதத்தை அவர் எழுதியிருந்தார்.

"மிக்க நன்றியும் அன்பும் நிறைந்தவரே,

நேற்று முகாவிலில் அன்ரன் அன்பழகன் (முன்னாள் என்.எல்.எப்.ரி), தவநாதன் (முன்னர் புளொட் - தற்போது மாகாணசபை உறுப்பினர்), சந்திரகுமார் எம்.பி ஆகியோர் உங்களைப் பற்றிச் சொல்லியே தங்களின் பேச்சை ஆரம்பித்தனர்.

எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமையும்.

மின்சாரம் கிடைத்ததையிட்டு முகாவில் மக்கள் மிக மகிழ்ச்சியடைந்தனர். இப்போது முகாவில், கொற்றாண்டார் குளம், இயக்கச்சி ஆகிய இடங்களுடன் வீதிகளால் இணைக்கப்பட்டுள்ளது.

பாடசாலைக் கட்டிடமும் மதிலும் பொதுநோக்கு மண்டபமும் நன்றாகக் கட்டப்பட்டுள்ளன.

கல்விக்கான ஏற்பாடுகள் தாராளமாகச் செய்யப்பட்டுள்ளன.

குளங்கள் அனைத்தும் புனரமைக்கப்பட்டுள்ளன. சனங்கள் விவசாயத்தை சற்று மும்முரமாகச் செய்கிறார்கள். முருங்கையும் கச்சானும் நல்ல விளைச்சலைத் தருகின்றன. போக்குவரத்து இலகுபடுத்தப்பட்டுள்ளதால், சந்தைப்படுத்தல் வசதியுண்டு.

அங்கே உள்ள ஆகப்பெரிய பிரச்சினை சனங்களுக்கிடையில் ஒற்றுமையில்லை. மற்றது, பல கோவில்கள் கோடிக்கணக்கான செலவில் புனரமைக்கப்பட்டு, கும்பாபிசேகம், அது இது எண்டு சனங்களை மாதக்கணக்காக கட்டிப்போட்டு வைத்திருக்கின்றன. இந்தக் கோவில்களை கட்டுவோர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முதலாளிமார்.

இதிலிருந்து எப்படி அவர்களை மீட்பது என்று தெரியவில்லை.

தவிர, உங்கள் விருப்பங்களை நிறைவேற்றுவதே எங்கள் விருப்பமும்".

– இந்தக் கடிதத்துக்கு பெரிய விளக்கம் எதுவும் தேவையில்லை. இங்கு குறிப்பிடப்படும் கிராமங்கள் அனைத்துமே முன்னொருபோதும் சீரான வீதி வசதிகள் எதுவுதே இல்லாத மணல் நிறைந்த பிரதேசங்கள். மின்சாரம் என்பது இந்தக் கிராம மக்கள் ஒருபோதும் நினைத்துப் பார்த்திராத விடயம். கல்வியும் அப்படியே. அரச உத்தியோகத்தர்கள் ஒரு வீதம்கூட இல்லை.

– இப்படியான கிராமங்கள் இன்று போர் முடிவடைந்து நான்கு வருடங்களில் இவ்வாறானதொரு வளர்ச்சியை எட்டியிருக்க முடியுமெனின், இந்த 30 வருடக் கொடிய போர் நடைபெறாமல் இருந்திருப்பின், அந்தக் கிராமங்கள் எத்தகையதொரு வளர்ச்சியை எட்டியிருக்க முடியும்.

**- வானவில்**

# புதிய வெளியீடுகள்

நீர்வை பொன்னையன் அவர்களின்

**'நினைவுகள் அழிவதில்லை'**

[சிறுகதைகள்]

வெளியீடு:

இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம்

18, 6/1, கொலிங்வூட் பிளேஸ்,

கொழும்பு - 06 [இலங்கை]

E-Mail: kailashpath@yahoo.com

சுமதி குகதாசன் அவர்களின்

இரண்டாவது கவிதைத் தொகுதி

**'எதனை வேண்டுவோம்'**

வெளியீடு:

சு .ஜனாதன்

28, 4/2 பசல்ஸ் லேன்,

கொழும்பு - 06 [இலங்கை]


படிப்பகம்

www.padippakam.com

10ம் பக்கத்தொடர்ச்சி...

நோக்கங்களின் அடிப்படையிலானது. இந்த நிலைமையில் ஆனந்தசங்கரி தனது அரசியல் எதிர்காலம் குறித்து திட்டவட்டமானதும் தீர்க்கமானதுமான முடிவை எடுப்பது அவசியமானது. அப்படி என்ன முடிவை அவர் எடுக்க முடியும்?

ஆனந்தசங்கரியைப் பொறுத்தவரை தனித் தமிழீழத்தை அவர் ஏற்பவரல்ல. ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்கள் நியாயமான உரிமைகளைப் பெற்று வாழ வேண்டும் என்பதே அவரது தொடர்ச்சியான நிலைப்பாடு. அதற்கு சிங்கள மக்களின் ஒத்துழைப்பைப் பெறவேண்டும் என்பதும் அவரது கருத்தாகும். இந்த நிலைமையில் ஒரு பழைய இடதுசாரியான அவர் படு பிற்போக்கானதும், இனவாதப் போக்குடையதுமான தமிழ் தேசியக் கூட்டமைப்பில் தொடர்ந்தும் அவமானத்துடனும், அழையா விருந்தாளியாகவும் அங்கம் வகிப்பது தவறாகும். அவர் ஒரு மூத்த தமிழ் அரசியல்வாதி என்ற வகையில் சரியான முடிவை எடுக்க வேண்டும்.

இன்றைய சூழ்நிலையில் பிற்போக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக தமிழ் ஜனநாயக சக்திகளின் ஐக்கிய முன்னணி ஒன்றை மீண்டும் உருவாக்குவதே ஒரேயொரு சரியான வழியாகும். அந்த வகையில் ஈ.பி.டி.பி, பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (இவ்வணியினர் ஏற்கெனவே நடந்து முடிந்த வட மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிட்டது ஒரு நல்ல சகுனமாகும்), தமிழர் விடுதலைக் கூட்டணி என்பனவும், இடதுசாரிக் கட்சிகளும் இணைந்து இந்த அணியை உருவாக்குவதுடன், தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான அனைத்து சக்திகளையும் அந்த அணியில் இணைக்கவும் முயற்சிக்க வேண்டும். இது ஒன்றே ஆனந்தசங்கரி உட்பட, தமிழ் ஜனநாயக – முற்போக்கு சக்திகளுக்கு முன்னாலுள்ள ஒரே பாதையாகும். *

முன்பக்கத்தொடர்ச்சி...

புலி ஆதரவுச் சக்திகளும் பிரச்சாரத்தில் ஈடுபட்டன. பின்னர் அரசாங்கம் தேர்தலுக்கான திகதியை அறிவித்ததும், குறித்த தினத்தில் தேர்தல் நடக்காது என்றும், தேர்தல் திகதி காலவரையின்றி ஒத்திவைக்கப்படும் என்றும் பிரச்சாரம் செய்தன. அந்தப் பிரச்சாரமும் பொய்யாகிப்போக, அரசாங்கம் இராணுவத்தைப் பயன்படுத்தி பாரிய தேர்தல் மோசடியில் ஈடுபட்டு, குறுக்கு வழியில் வெற்றிபெறத் திட்டம் தீட்டியுள்ளது எனப் பிரச்சாரத்தை முடுக்கிவிட்டனர். அதுவும் பொய் என்பதை அரசாங்கம் நிரூபித்துவிட்டது.

பெரிய அளவில் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் எவருமின்றி, அரசாங்கம் தேர்தலை மிகவும் வெளிப்படையாகவும், ஜனநாயகரீதியாகவும் நடாத்தி, மக்கள் தங்களுக்கு விரும்பியவர்களைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்தது. இது அரசாங்கத்திற்கு தோல்வியிலும் கிடைத்த ஒரு வெற்றியாகும். ஜனநாயத்திற்குக் கிடைத்த ஒரு வெற்றியுமாகும். அரசாங்கம் இந்தத் தேர்தலை வெற்றிகரமாக நடாத்தியதின் மூலம், தமிழ் மக்களுக்கு 25 வருடங்களாக கிடைக்கவிடாது புலிகளாலும், ஐ.தே.கவினாலும் தடுத்து வைக்கப்பட்டிருந்த உரிமையை கிடைக்கச் செய்திருக்கிறது. அத்துடன் மாகாணசபை முறைமையை ஏற்க முடியாது என்று நிராகரித்துவிட்டு, தனித்தமிழ் நாடு கோரிய தமிழ் தேசியக் கூட்டமைப்பையும் அதில் பங்குபெறவும் வைத்துள்ளது.

வடக்கு மக்கள் இத்தேர்தலில் அரசாங்கத்தை ஆதரிக்காமைக்கு வெறுமனே அவர்களது பிற்போக்குத்தனம்தான் காரணம் என்றும் புறந்தள்ளிவிட முடியாது. அவர்களில் ஒரு சாரார் உண்மையிலேயே சில அதிருப்திகளை அரசாங்கம் மீது கொண்டிருந்தனர் என்பது சந்தேகத்திற்கு இடமில்லாத உண்மை. இறுதியுத்த காலத்தில் தமது உறவுகளை இழந்தமை, யுத்தம் முடிவுற்று நான்கு வருடங்களாகியும் அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான தீர்வு எதனையும் காணாமை, யுத்தம் முடிந்த பின்னரும் தொடர்ச்சியான அதிகரித்த இராணுவப் பிரசன்னம், வலி வடக்கு உயர்பாதுகாப்பு காணிப்பிரச்சினை போன்ற சில விடயங்களும் இந்தத் தேர்தலில் குறிப்பிட்டளவு செல்வாக்கைச் செலுத்தியுள்ளது.

அதேநேரத்தில் இந்தத் தேர்தலில் வடக்கு மக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் இருந்த தீவிர புலி ஆதரவாளர்களை ஓரளவு நிராகரித்துமுள்ளனர். முதலமைச்சர் வேட்பாளர் சி.வி.விக்கினேஸ்வரனுக்கு எதிராக, அவர் ஒரு கொழும்புத் தமிழர் என்றும், சிங்கள இனத்தில் தமது பிள்ளைகளுக்கு திருமணம் செய்தவர் என்றும், தமிழக அரசியல் கட்சிகளின் தலையீட்டை எதிர்ப்பவர் என்றும், அரசாங்கத்துடன் இணைந்து செயற்படப் போகிறார் என்றும், அவருக்கு எதிராக தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் உள்ள மாவை சேனாதிராசா தலைமையிலான புலி ஆதரவுச் சக்திகள் இரகசியமாகப் பிரச்சாரம் செய்த போதிலும், எந்தவொரு கட்சியினதும் அங்கத்தவர் அல்லாத விக்னேஸ்வரனை ஆகக்கூடிய (1,33,000) அதிகப்படியான விருப்பு வாக்குகளால் வெற்றிபெற வைத்ததின் மூலம், வடக்கு மக்கள் புலி ஆதரவுப் போக்குக்கு எதிராகவே வாக்களித்துள்ளனர் எனக் கருத முடிகிறது.

இந்த நிலைப்பாட்டை வடக்கு மக்கள் கடந்த பொதுத்தேர்தலிலும் வெளிப்படுத்தி இருந்தனர். அந்தத் தேர்தலில் புலிகளை வெளிப்படையாக ஆதரித்துக்கொண்டு போட்டியிட்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலம், குதிரை கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன், எம்.கே.சிவாஜிலிங்கம் போன்றோரை படுமோசமாகத் தோற்றுப்போக வைத்தனர் வடக்கு மக்கள். இந்த மாகாணசபைத் தேர்தலிலும்கூட, ஆகக்கூடிய விருப்பு வாக்குகளைப் பெற்ற மூன்று பேரும், பாரம்பரியமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்காத வேட்பாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தத் தேர்தல் முடிவில் குறிப்பிடத்தக்க இன்னொரு

www.padippakam.com

அம்சம், மாகாணசபை முறைமையைப் புறக்கணிக்கும்படி கோரிய புலம்பெயர் புலி அமைப்புகளின் கோரிக்கையையும், தமிழக பிழைப்புவாதிகளின் கோரிக்கையையும் வடக்கு மக்கள் நிராகரித்துவிட்டு, அதிக வீதாசார அளவில் வாக்களிப்பில் கலந்துகொண்டமையாகும். அதன் மூலம் ஐக்கிய இலங்கைக்குள் நியாயமான உரிமைகளுடன் வாழ்வதையே தமிழ் மக்கள் விரும்புகிறார்கள் என்பதை ஒரு குறியீடாக வடக்கு மக்கள் உணர்த்தியிருக்கிறார்கள்.

எது எப்படியிருந்த போதிலும், தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வடக்கு மக்கள் வழங்கிய அமோக ஆதரவு தீர்க்கமானதும், எதிர்பார்ப்புகள் நிறைந்ததுமாகும். எனவே இனிமேலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெற்றுக் கோசங்களை வைத்துக்கொண்டு தமிழ் மக்களை ஏமாற்ற முடியாது. மாகாணசபைகளுக்கு குறித்தொதுக்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில், வட மாகாணசபையின் அதிகாரத்தை வைத்திருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உரிய முறையில் வடக்கு மக்களுக்கான சேவையை வழங்க வேண்டும்.

இலங்கை அரசியல் அமைப்பின் பிரகாரம் மாகாணசபைகளின் அதிகாரங்கள் வரையறைக்குட்பட்டவை. ஏதாவதொரு காரணத்தைச் சொல்லி மாகாணசபைகளைக் கலைக்கும் அதிகாரம் மத்திய அரசாங்கத்தால் நியமிக்கும் மாகாண ஆளுநருக்கு உண்டு என்ற கத்தி மாகாணசபைகளின் தலைகளுக்கு மேல் எப்பொழுதும் தொங்கிக் கொண்டிருக்கும் சூழலும் இருக்கின்றது. எனவே ஒரு மாகாணசபையை நிர்வகிப்பது என்பது கத்தி முனையில் நடப்பது போன்றது. 'எடுத்தேன், கவிழ்த்தேன்' என்ற பாணியில் இதுவரைகாலமும் அரசியல் செய்து வந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சாதுரியம் உண்மையில் இனிமேல்தான் பரீட்சிக்கப்பட இருக்கிறது.

இந்த நிலைமையில், மாகாணசபையைத் திறம்பட நிர்வகிப்பதற்கு அரசாங்கத்தின ஒத்துழைப்பு மிகவும் இன்றியமையாதது. நாட்டில் உள்ள 9 மாகாணசபைகளில் 8 சபைகள் அரசாங்கத்தின் வசம் உள்ளது. இப்பொழுதுதான் முதன்முதலாக வடக்கில் எதிரணிக் கட்சி ஒன்றின் நிர்வாகத்தில் ஒரு மாகாணசபை செயற்பட இருக்கின்றது. எனவே இருதரப்புகளுக்குமிடையில் புரிந்துணர்வு இருப்பது மிகவும் அத்தியாவசியமானது. அதைப் புரிந்துகொண்டு செயற்படுவதில்தான், தமிழ் தேசியக் கூட்டமைப்பினால் நிர்வகிக்கப்படும் வட மாகாணசபையின் எதிர்காலம் தங்கியிருக்கிறது. 25 ஆண்டுகளுக்குப் பின்னர் கிடைத்த இந்த வரப்பிரசாதத்தை முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் தலைமையிலான வட மாகாணசபை அர்த்தபுஸ்டியுடன் நடைமுறைப்படுத்துவது அவசியம்.

அதேவேளையில் வட மாகாணசபையின் சீரான செயற்பாட்டுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ தலைமையிலான மத்திய அரசாங்கம் முழு ஒத்துழைப்பையும் வழங்குவது காலத்தின் தேவையாகும். அதன் மூலம்தான் வட மாகாணசபையையும், அது பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களையும் நாட்டின் தேசிய நீரோட்டத்திற்குள் உள்வாங்க முடியும். அத்துடன் வடக்கு மக்கள் இலங்கையின் ஜனநாயகக் கட்டமைப்பு மீது நம்பிக்கை வைத்து இந்தத் தேர்தலில் பங்குபற்றி அளித்துள்ள தீர்ப்பைக் கௌரவிப்பதாகவும் அர்த்தபுஸ்டியாக்குவதாகவும் இருக்கும்.

வட மாகாண சபையும், அரசாங்கமும் இணக்கத்துடனும், ஒத்துழைப்புடனும் செயற்படுவதின் மூலம்தான் இலங்கையின் வரலாற்றில் புதிய அத்தியாயம் ஒன்றைத் திறக்க முடியும்.

*

# சொல்வதை செய்யார் செய்ததை சொல்லார்

மூதூரைச் சேர்ந்த றிஸானா நபீக் என்ற ஏழை இஸ்லாமியச் சிறுமிக்கு சவூதி அரேபியாவில் வைத்து தலையைச் சீவி மரணதண்டனை வழங்கிய விவகாரம் உலகம் அறிந்த ஒன்று. அந்த அநியாயத்துக்கு பிராயச்சித்தமாக, சவூயிலிருந்து அவரது ஏழைப் பெற்றோருக்குப் பண உதவி வழங்க சிலர் முன்வந்தபோதும், தமது மகளுக்கு கொடுங்கோல் இழைத்த அந்த நாட்டிடமிருந்து எந்தவித உதவியும் வேண்டாமென அந்தச் சிறுமியின் தன்மானமுள்ள பெற்றோர் மறுத்துவிட்டனர். இந்த நிலைமையில் இலங்கையில் உள்ள சில தனிப்பட்ட செல்வந்தர்களும், பொது அமைப்புகளும் அந்தப் பெற்றோருக்கு உதவி செய்யப்போவதாக ஊடகங்களில் பிரச்சார அறிக்கைகளை விடுத்தனர். அதில் ஒன்று தென்னோலைக் கொட்டிலில் வாழும் அந்தப் பெற்றோருக்கு புதிய வீடு ஒன்று கட்டிக்கொடுப்பது என்பதாகும்.

ஆனால் சில மாதங்களுக்குள்ளாகவே 'வாய்ச்சொல் வீரர்கள்' தமது வாக்குறுதியைக் காற்றில் பறக்க விட்டுவிட்டனர். ஆனாலும் அந்த ஏழைப் பெற்றோருக்கு தற்போது நல்ல வீடு ஒன்று கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த வீட்டைக் கட்டிக் கொடுத்தவர்கள் வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்களோ அல்லது தமிழர்களோ அல்ல. ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக சமூகமும், இலங்கை இராணுவமும் இணைந்து மனிதாபிமான அடிப்படையில் இந்த வீட்டை நிர்மாணித்துக் கொடுத்துள்ளனர். எந்தவிதமான பிரதிபலனையும் எதிர்பார்க்காமல், சத்தம் சந்தடியின்றி, இந்த மனிதாபிமான உதவியை அவர்கள் செய்துள்ளனர்.

இந்த வீடு கையளிக்கும் நிகழ்வில் ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக உப வேந்தர் கலாநிதி ரி.என்.எல். கருணரத்ன, இராணுவத்தளபதி ஜெனரல் தயா ரத்னாயக்க உட்பட பல பல்கலைக்கழக விரிவுரையாளர்களும், இராணுவ அதிகாரிகளும் நேரில் கலந்து கொண்டுள்ளனர்.

வடக்கிலும் கிழக்கிலும் இரண்டு மாகாணசபைகள் இருந்தும், இரண்டு மூன்று பல்கலைக்கழகங்கள் இருந்தும், பல முஸ்லிம் – தமிழ் அரசியல் கட்சிகளும், தனவந்தர்களும், பல அரசுசாரா அமைப்புகள் இருந்தும், எங்கோ இருக்கின்ற ஒரு பல்கலைக்கழக சமூகமும், இராணுவமும் இணைந்து இந்த மனிதாபிமானச் செயலைச் செய்துள்ளன என்றால், வட கிழக்கு மாகாணத்தில் இருந்துகொண்டு இனப்பற்று, தேசப்பற்று, பிரதேசப்பற்று, மனிதாபிமானம் எல்லாம் சிலர் பேசுவது வெறும் வெளி வேசங்கள்தானா? *


படிப்பகம்


www.padippakam.com



## "விடுதலைப் புலிகள் இயக்கம் என்றைக்குமே ஜனநாயக உணர்வோடு இயங்கவில்லை"!

விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்றும் அவர்கள்தான் ராஜீவ் காந்தியைக் கொன்றார்கள் என்றும் 'மெட்ராஸ் கபே' படம் சொல்லுவதால்தான் தடை கோருவதாக தமிழ் உணர்வாளர்கள் சொல்லுகிறார்கள்.

"ஆனால் இதே கருத்தை தங்கள் பேச்சிலும் எழுத்திலும் பல்லாண்டுகளாக காங்கிரஸ் தலைவர்களும் சோவும் சுப்பிரமணிய சுவாமியும் சொல்லி வருகிறார்கள். அப்படி இருக்க, அதேபோன்ற கருத்தைச் சொல்லும் இந்தப் படத்தை தடைசெய்யக் கோருவது சரியல்ல" என்று சொல்கிறார் மனித உரிமை ஆர்வலர் அ.மார்க்ஸ்.



அ.மார்க்ஸ்

"பொதுவாகவே நமது நாட்டில் சகிப்புத்தன்மை குறைந்துகொண்டே வருகிறது. சமீபத்தில் கூட அகமதாபாத்தில் பாகிஸ்தான் ஓவியரின் ஓவியங்களை உடைத்து எறிந்தனர் இந்து இயக்கத்தினர். ஆனால் திரைப்படம் என்பது ஒரு வலிமையான ஊடகம். நமது நாடு பல தரப்பு மக்களைக் கொண்ட பன்முகச் சமூகமாகும். அந்தக் கட்டமைப்பில் நல்லிணக்கத்துக்கு எந்த விதத்திலும் பாதிப்பு வரக்கூடாது என்பதே படைப்பாளியின் நோக்கமாக இருக்க வேண்டும். முஸ்லிம்களைப் பயங்கரவாதிகள் போல் காட்டியதால்தான் விஸ்வரூபத்துக்கு எதிர்ப்பு கிளம்பியது. ஆனால், அதேசமயம், விடுதலைப் புலிகள் இயக்கம் என்றைக்குமே ஜனநாயக உணர்வோடு இயங்கவில்லை என்பதே உண்மை. அவர்கள் சக போராளிக் குழுக்களையும் முஸ்லிம்களையும் கொன்றார்கள் என்பதையும் மறுப்பதற்கில்லை. புலிகளை யாரும் விமர்சிக்கக்கூடாது என்ற நிலைப்பாட்டை வளரவிடுவது ஈழத் தமிழர்களின் நலன்களுக்கு எதிரானது என்பதே என் கருத்து. புலிகளின் தவறுகளை ஆய்வு செய்து திருத்திக்கொண்டால்தான் எதிர்காலத்தில் ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையைப் பெறத்தக்க வகையில் புதிய எழுச்சி ஏற்படும். எனவே அந்த அளவில், 'மெட்ராஸ் கபே' படத்தைத் திரையிடக்கூடாது என்று சொல்வது ஏற்கத்தக்கது அல்ல" என்று முத்தாய்ப்பாகச் சொன்னார் பேராசிரியர் மார்க்ஸ்.

**– நன்றி கல்கி வார இதழ்**

## குரங்கிலிருந்து மீண்டும் மனிதன் தோன்ற முடியுமா?

பூமியில் மனிதர்கள் ஒருக்கால் அழிந்துவிட்டால், மீண்டும் மனிதக்குரங்குகளில் இருந்து மனிதன் தோன்ற வாய்ப்பு இருக்கிறதா?

இந்த இடத்தில் ஒரு விஷயத்தை முதலில் நாம் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். பரவலாக நம்பப்படுவது, கூறப்படுவதைப் போல நாம் மனிதக் குரங்கில் இருந்து பரிணாம வளர்ச்சி அடையவில்லை. நமக்கும், மனிதக்குரங்குகளுக்கும் பொதுவான ஒரு மூதாதை 1 கோடி ஆண்டுக்கு முன்னால் இருந்திருக்கக் கூடும் என்பது விஞ்ஞானிகளின் கணிப்பு. அந்த பொது மூதாதையை Pan Prior என்று அழைக்கிறார்கள். அல்லது மனிதன், குரங்கு பொது மூதாதை என்கிறார்கள். அறிவியல் ரீதியில் நாம் இன்னமும் மனிதர்களாக வகைப்படுத்தப்படவில்லை. நாம் மனிதக்குரங்குகள்தான். அதாவது, சமூகத்தில் வாழும் மனிதக் குரங்குகள்.

அதேநேரம் நமது பொது மூதாதை இப்போது வாழ்கிறது என்று வைத்துக் கொண்டாலும்கூட, பரிணாம வளர்ச்சி அல்லது படிநிலை வளர்ச்சி என்பது தொடர்பற்ற மரபணுக் கலப்பு (Gene mutation), சுற்றுச்சூழல் நெருக்கடிகளால் (Environmental pressures) உருவாகும் இயற்கை தேர்வு (Natural selection) ஆகியவற்றின் அடிப்படையிலேயே நிகழ முடியும். இவற்றை வைத்துப் பார்த்தால், மீண்டும் மனித இனம் தான் கடந்து வந்த பாதையைத் தொடுவதற்கு மிகக் குறைந்தபட்ச வாய்ப்புகள்கூட இல்லை.

**– ஆதி, நன்றி: தி இந்து**

## கேள்வி—பதில் – சோ

ஆர். மாதவராமன், கிருஷ்ணகிரி–1

கேள்வி: 'தமிழகத்தில் விடுதலைப் புலிகள் ஒரு பிடி மண் கூடக் கேட்டதில்லை' — என்கிறாரே வைகோ?

சோ : ஆம். இங்குள்ள உயிர்களைத்தான் அவர்கள் எடுத்தார்களே தவிர, மண்ணை எடுக்கவில்லை.



படிப்பகம்